விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆனி 29 ஷவ்வா 5 இதழ் 152

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (13—7—86)

### போராளிகள் குழுத் தலைவர்கள்

## இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர்

சென்னை, ஜூலை 12

இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசு முன்வைத்துள்ள ஆலோசனைகள், திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயும் பொருட்டு சென்னையிலிருந்து இன்று தமிழ் போராளிகள் குழுத்தலைவர்கள் புதுடில்லி விரைந்துள்ளார்கள்.

இவர்கள் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன், இவ்விடயம் குறித்து ஆலோசனை நடத்துவார்கள்.

இதனிடையே நேற்று இந்திய நிர்வாசத்துறை இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரத்தையும் சந்தித்துப் பேசினார்கள். [பி]

### ● அரசியல் கட்சிகளின் மாநாடு ● மாகாண சபை

## அரசின் நடவடிக்கையை எதிர்த்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[அலுவலக நிருபர்]

அரசியல் கட்சிகளின் மாநாட்டையும் மாகாண சபையையும் எதிர்த்தும் இந்திய மத்திய அரசு உள்ளிட்டு சர்வதேசமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறு கோரியும் யாழ். குடா நாட்டுமக்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை இன்று நடாத்தவுள்ளாாகள்.

இன்று காலை 9 மணிக்கு திட்டமிட்டபடி மருதனுமடம் சந்தியில் யாழ். குடா நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து வரும் மக்கள் ஒன்று கூடுமாறு பொது மக்கள்சார்பில்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒன்று கூடும் மக்கள் ஊர்வலமாக காங்கேசன்துறை யாழ்ப்பாண வீதி வழியாகச் சென்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தை அடைவார்கள் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

இவ்வூர்வலத்துக்கு யாழ் குடா நாட்டிலுள்ள சகல தனியார் பஸ் உரிமையாளர்களும், தங்கள் வாகனங்களை போக்குவரத்து வசதிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் இவ்வூர்வலத்தில் சகல தொழிற் சங்கங்களையும் வெகுஜன அமைப்புகளையும், பொதுஸ்தாபனங்களையும் கலந்து கொள்ளுமாறும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பின்தள்ளும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டையும் மாகாண சபைத் தீர்வையும் மற்றும் சில சலுகைகளையும் அரைகுறைத்தீர்வுகளையும் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலமூலம் தெரியப்படுத்துவதாசவும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்சுப்பட்டுள்ளது.

### பத்திரிகையாளர் மகாநாடு

யாழ். பல்கலைக்கழக மைதானத்தை ஊர்வலம் அடைந்ததும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மகாநாடொன்று நடாத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# ● "நேரடி பேச்சுக்கள் திருப்தியளித்தால் போராளிகள் தலைவர்களையும் பங்குபற்றுமாறு கோருவோம்"

## அமிர்தலிங்கம் விசேஷ பேட்டி

கொழும்பு, சனி

"இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் பொருட்டு ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுடன் நாம் நடத்தும் பேச்சுக்கள் திருப்தியளிக்கும் பட்சத்தில், போராளிகள் குழுத் தலைவர்களையும் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு கோருவோம்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம இலங்கை வந்தடைந்த சிலமணி நேரத்தின் பின் 'ஈழநாடு'வுக்கு அளித்த விசேஷ பேட்டியின்போது கூறினர்

திரு. அமிர்தலிங்கம் பே லும் பேசுகையில், "அரசின் ஆலோசனைகள் அனைத்தையும் நாம் ஏற்கவில்லை, நாம் முன் வைத்து அரசினல் ஏற்றுக் கொள்ளப்பட்டத விடயங்கள் குறித்து மீண்டும் நாம் விரிவாக பேச்சு நடத்துவோமென்றூர்.

அத்துடன் வடக்குக் கிழக்கு பகுதியிலுள்ள பிரஜைகள் குழுத்தலைவர்கள் மற்றும் கூட்டணியின் முக்கிய உறுப்பி

(12ம் பக்கம் பார்க்க)

### கூட்டணிக்குழு கொழும்பு வந்தது

கொழும்பு, சனி.

இனப்பிரச்னை சம்பந்தமாக ஜனாதிபதி ஜயவர்தனவுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடாத்தும் பொருட்டு 5பேர் கொண்ட த. வி. கூ குழுவொன்று இன்று காலை கொழும்பு வந்து சேர்ந்தது.

த. வி கூ. செயலதிபர் திரு அமிர்தலிங்கம், தலைவர் திரு. சிவசிதம்பரம். திருவாளர்கள் ஆனந்தசங்கரி, வி. யோகேஸ்வரன், ஆர். சம்பந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### மன்னார்க் கடலில்

## இயந்திரப் படகின் மீது பீரங்கி 'ஹெலி' தாக்குதல்

யாழ்ப்பாணம் ஞாயிறு

மன்னார் கடல் பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த இயந்திரப்படகு மீது பீரங்கியாலும் ஹெலிகொப்டரிலிருந்தும் குண்டுவீசப்பட்டதால் அப்படகிலிருந்தவர்கள் பலியானதுடன் படகும் தீப்பற்றி எரிந்தது.

நேற்றுமாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

விடத்தல் தீவுக்கு 2 மைல் தூரத்தில் இயந்திரப் படகு சென்றுகொண்டிருந்த போது ஹெலிகொப்டர் ஒன்று பறந்து சென்று கப்பலை நோக்கி சரமாரியாகத்துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் குண்டுகளை வீசியதாசவும் மேலும் அப்படகை நோக்கி வாயந்த பீரங்கிப்படகு பீரங்கியால் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்திப் பலகையில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ● கொழும்பு சென்ற

## மிளகாய் லொறி தீக்கிரை விவசாயி அடித்துக் கொலை

### சாரதி, கிளினர் படுகாயம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மிளகாய் ஏற்றிச் சென்ற லொறி எரிக்கப்பட்டது. மிளகாய் சொந்தக்காரரான விவசாயி அடித்துக் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த சாரதியும் கிளினரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

நேற்று 4 மணியளவில் குருநாகலுக்கு அண்மையிலுள்ள வெல்சாரப்புர என்ற இடத்திலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எஸ் பி.எஸ். நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தலொறி நேற்றுத்தான் முதன்முதலாக கொழும்புக்குச் சென்றதாகவும் தெரிவிககப்படுகிறது.

விசுவமடுவில் உள்ள விவசாயி மிளகாயை இந்த லொறியில் ஏற்றிக் கொழும்புக்குக் கொண்டுசெல்லும் போது வெல்சாரப்புரவில் இனந்தெரியாத நபர்கள் லொறியை மறித்து மூவருக்கும் அடித்தனராம்.

இச்சமயம் விவசாயி இற

(11ம் பக்கம் பார்க்க)

### நிலைமை சீராகும் வரை சலுகை

லண்டன் ஜூலை 11,

"சுவிஸ் அரசிடம அகதிகள் அந்தஸ்துகோரி மனுதாக்கல் செய்து நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் அனைவரும் உடன் திருப்பி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டார்கள்" என்று சுவிஸ் அரசின் சார்பில் பேசிய அரச பிரதிநிதியான திரு. பீற்றர் கூறியுள்ளார்.

இலங்கையில் வன்செயல்

(12ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கருவாடுக்கேற்ற அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M 777 K K S. Road, Jaffna. T. P 22611
[C 3365]

கணேசலிங்கம் சுருட்டு சுத்தமான புகையிலையினால் தயாரிக்கப்பட்டது. தேவையான வியாபாரிகள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: S T. கணேசலிங்கம், No. 5, ஏளாக வீதி, திருநெல்வேலி. [C 3386]

மிகவும் நல்ல நிலையிலுள்ள [England make Incubator] 100 முட்டை அடைவைக்கக் கூடிய குறைந்த மண்ணெண்ணெயில் இயங்கும் குஞ்சு பொரிக்கும் மெசின் விற்பனவுக்குண்டு. சிக் அன் கைன், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C-3421]

வீட்டுத்தளபாடங்கள் Show Case, கட்டில், அல்மாரி, கண்ணாடிமேசை Dressing Table தையல்மெஷின், Kenwood Chef, எவர்சில்வர், Pyrex ரீசெற், Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Sanyo Oven, Baby Cot, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, Main Street, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி.) C 3414]

வீட்டுக்குரிய சகலவிதமான மரத்தளபாடங்கள் யன்னல், நிலை, கதவு, இரும்புக் கேற், கிறில் தளபாடங்கள், மரக் கடைச்சல் பொருட்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. அபிராமி மரத்தொழிற்சாலை, ஈழநாடுஅருகில், 75, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். (C 3435)

பலவர்ண Love Birds விற்பனைக்குண்டு. தொடர்பு: 12, நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (C 3442)

நல்லநிலையிலுள்ள 86ஸ்ரீ5642 HONDA MB 8 விற்பனைக்குண்டு. தொடர்பு: நித்தியானந்தம் 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர். நல்லூர் சிவன் கோயில் முன்பாக உள்ள ஒழுங்கை. [C 3453]

Imperial-Standard தட்டச்சு யந்திரம் [Typewriter] ஆங்கிலம், உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Fudo Enterprises, 39/17, மின்சார நிலையவீதி, [3 ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். [C 3456]

## தேவை

நூடில்ஸ் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை அதற்குரிய உபகரணங்களும் இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளவும். 132, ஆடியபாத வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில். [3357]

சமையல் வேலைகளில் உதவி புரிய ஒருவர் வேண்டும். ஆணோ, பெண்ணோ தனித்தாளாய், உதவியற்றோராய் இருப்போர் நேரில்வருக. புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [C 3449]

நன்கு அனுபவமுள்ள சமையல் வேலை தெரிந்தவர்களும், வெயிற்றர் வேலை செய்யக் கூடிவர்களும் உடன் தேவை. நேரில்வரவும். றிக்கோசுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 3454]

## தேவை

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்கு சோழி தேவை. உயர்ந்தபட்ச விலையுடன் நேரில் வந்தும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T P 23131 [C 3418]

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. சம்பளம் 25/- - 30/- வரை தகைமைக்கேற்றவாறு கொடுக்கப்படும். ஆண்களும் தேவை அனுபவம் உள்ளவர்கள் மட்டும். 18, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். [C 3356]

தெல்லிப்பளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள ஒரு லேத்மன் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், தெல்லிப்பளையிலிருந்து 3 மைல் சுற்றுடலில் வசிப்பவரும் விரும்பத்தக்கது. 18-7-86 க்குமுன் விண்ணப்பிக்கவும் டயனி எலெற்றிக்கல்ஸ், 222, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C 3433

## மணப்பந்தல்

டாக்டர், எஞ்சினியர், எக்கவுன்டன்ற், வங்கியாளர், ஆசிரியர் முதலானோர் எல்லா இன மதத்திலும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் வரவும். வெளிநாட்டில் வேலை செய்யும் மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (C-3412)

யாழ். இந்துவேளாள விஞ்ஞானப் பட்டதாரிக்கு 32 வயதிற்குட்பட்ட நற்குணமு அழகு பொருந்திய தொழில் புரியும் விஞ்ஞான பட்டதாரி பணப்பெண தேவை. ஏனைய பட்டதாரிகளும் குறிப்பு சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 3415, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3415)

## வாடகைக்கு

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் வீடுவாடகைக்கு உடனடியாக விடப்படும். விபரங்கட்கு நேரில் வரவும். தமயந்தி அச்சகம், மானிப்பாய். [C-3405]

## வைத்தியம்

நாட்பட்ட நோய்கட்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி கிளினிக் 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [C 3164]

## விற்பனைக்கு

A/L வகுப்பிற்கான யாழ். பிரபல ஆசிரியரின் ''பொருளியல்'' வினாவிடை சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [நியூ ஸ்ரார் வெளியீடு]
(C 3303)

A/L மாணவர்களுக்கான ''கணக்கியல் கோட்பாடுகள்'' [Accountany Theory] சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [C3302]

## வகுப்புகள்

5-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு காலை, மாலை விசேட ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன ஏனையவர்களுக்கும் தவணைக் கால விசேட ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் உண்டு. விபரத்திற்கு: V K பிள்ளை, மணியார்பதி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [C 3440]

## தவறிவிட்டது

எனது Deposit Certificate Central Finance இலக்கம் 076415 கொண்டது. யாழ். நியூமார்க்கட்டில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சி. க. பிரேமரூபன், C/o T. காசிநாதன், 19, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (C 3437)

## பயிற்சி

Radio T. V. தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 15-07-86. விபரங்கட்கு எலக்ரோனிக் ரெயினிங் சென்றர், வி. நித்தியானந்தன், கல்வளை ரோட், சண்டிலிப்பாய். [C 3457]

பொ. காங்கேசன்
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு ரெம்பிள் ரோட்டைச் சேர்ந்த நாகமுத்து சிவசுப்பிரமணியத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— காலம்சென்றவர் நாகமுத்து சிவசுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியம் ''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு, ரெம்பிள் ரோட்.

— மனுதார்

வழ. இல: தத்துவம்/3981

எதிராக

1. சிவசுப்பிரமணியம் பாஸ்கரன்
2. சிவசுப்பிரமணியம் சுதாகரன்
3. இரத்தினகோபால் சிவகோபால் பெண் கௌரி
4. நாகமுத்து சிவசுப்பிரமணியம மகள் மைதிலி. (பராயமற்றவர்-
5 எல்லோரும் ''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு, ரெம்பிள் ரோட்.
6. சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் [இவர் 5-ம் எதிர் மனுதாரின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டவர்] ரெம்பிள் ரோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

— எதிர்மனுதார்கள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப் பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவர் கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றானதாக்கப் படலாகாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்துக்குக் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றார்.

இந்த 1986 ம் ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி என்னால் வரையப்பட்டது.

பொ. காங்கேயன்,
மனுதாரின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்,
கு. குலசிங்கம்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

(C-3430)

## சேவை

ரோனியோ, தட்டெழுத்து, அச்சு வேலைகளும் மிகவும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள் தயா அச்சகம், 138, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். [C 3434]

திருப்தியான சேவைகள் 'போட்டோஸ்ரட்', பிரதிகள் ''ரோனியோ'' பிரதிகள், ''தமிழ் - ஆங்கில ரைப்பிங்'' வேலைகள் யாவுக்கும், கிளீன்கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C 3367)

மிருதங்கம், வயலின், கிற்றார் உட்பட சகல விதமான வாத்திய கருவிகளும் விற்கவோ வாங்கவோ அல்லது பழுது பார்க்கவோ உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர்ரோட், யாழ்ப்பாணம். [C 3379]

மோட்டர், மின்விசிறி, மின் அடுப்பு, ரான்ஸ்போமர், கிறைண்டர், வாசிங்மெஷின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன திருத்த, றீவைண்டிங்செய்ய, வீட்டுவயறிங் செய்ய ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (ஈழநாட்டிற்கு எதிரில்) பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும். [C 3390]

காரைநகரில் அரசாங்க அனுமதிபெற்ற மொழிபெயர்ப்பாளர் பிறப்பு/விவாகம் மற்றும் பத்திரங்கள் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் மொழிபெயர்த்தும், ஆங்கிலக் கடிதங்கள் 'டைப்' செய்தும் கொடுப்பார்கள். க. பத்மநாதன், வாரிவளவு, காரைநகர். [C 3451]

அரசாங்க அனுமதிபெற்ற மொழிபெயர்ப்பாளர் பிறப்பு, விவாகம் மற்றும் பத்திரங்கள் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் மொழிபெயர்த்தும் ஆங்கிலக்கடிதங்கள் 'டைப்' செய்தும் கொடுப்பார்கள். பாதுகாப்பான இடம். கணபாலா ஸ்ரோர்ஸ், 24, (மேல் மாடி) யாழ். நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி 23806. (C3452]

## சேவை

G. C. E. O/L அனுபவ ஆசிரியர்களைக் கொண்டு கணிதம், ஆங்கிலம், தமிழில் திறமைச்சித்திபெற ரீயூசன் தரப்படும். வாடகை வீடுகள் அறைகள் தேவையானோர் விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(C3413)

### WANTED

(1) Office Assistant with experience. (2) Research Trainees (Graduate) Apply before 25-7-86. Secretary, Ootru Organisation, Mari Amman Lane, Thirunelvely, Jaffna. C 3450

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தால் வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் பெறவிரும்புவோர் மீளளிப்புப்பணமாக ரூபா 250/-ம், மீளளிக்கப்படாத பணமாக ரூபா 25/-ம் செலுத்தி பற்றுச்சீட்டுக்காண்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள்பெற வேண்டிய கடைசித் திகதி 19-07-86. கேள்விப்பத்திரங்கள் யாவும் பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என விலாசமிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டு 25-07-86 காலை 10-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.
A 922

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் ஆனிமாதம் 29-ம் நாள் (13-7-86) ஞாயிற்றுக்கிழமை பகல் 8-27 மணிதொடக்கம் 10-04 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருவளர் செல்வி |
|---|---|
| **க. செல்வராசா** | **ரோகினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணவிழா திருவருள் நலத்தினால் யாழ். நாச்சிமார் கோவிலில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய்ச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

மணமகள் இல்லத்தில் 16-7-86 புதன்கிழமை விருந்துபசாரம் நடைபெறும்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை விரும்பும்:

| | |
|---|---|
| து. கந்தையா, | இ. மகாலிங்கம் குடும்பத்தினர், |
| மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. | இல. 88, பத்திரகாளி கோவிலடி, வண். வடமேற்கு, யாழ்ப்பாணம். |

[C-3447]

# மாகாண சபைகள்

# மற்றுமொரு அரசியல் சூழ்ச்சியா?

இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாக, பேச்சுவார்த்தை மூலமாகவும், உடன்படிக்கை வாயிலாகவும், தீர்ப்பதற்கென அதி உத்தம ஜனாதிபதி அவர்கள் சில திட்டங்களை அதிகாரப்பரவலாக்கல் என்ற அடிப்படையில் மக்கள் முன்னும், தமிழீழ விடுதலைப் போராளிகள் முன்னும், ஏன் உலகத்தின் கண்ணோட்டத்திற்காகவும், சென்ற மாதப் பிற்பகுதியில் சமர்ப்பித்துள்ளார்

தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பங்குபற்றாத சர்வகட்சி மகாநாட்டில் சமர்ப்பித்த யோசனைகளின் பின் ஜனாதிபதி அவர்கள் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் கூட தான் சமர்ப்பித்த திட்டங்களையும், யோசனைகளையும் சில தகுந்த மாற்றங்களோடு, தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டாலென்ன, ஏற்றுக்கொள்ளாவிட்டாலென்ன அவற்றை அமுலாக்கியே தீருவேன் என வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும் ஒற்றையாட்சியின் கீழ், தனிமாகாண நிர்வாகங்கள் என்பவற்றின் உறுதியான அமைப்பிற்குள் நடைமுறைப்படுத்தக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ ஆலோசனைகளை தன்னால் ஏற்க முடியுமெனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி அவர்கள்சமர்ப்பித்துள்ள திட்டங்களையும், பத்திரிகையாளர் மகாநாட்டில் கொடுத்த விளக்கங்களையும் ஆராயும் பொழுது மக்களின் உடன்பாடோ அல்லது அவர்களின் நிராகரிப்போ அர்த்தமற்றது என்றே கூறவேண்டியுள்ளது இவ்விதமனப்பான்மையுடன் செயற்படுத்தும் தீர்வானது தமிழ்மக்களுடைய அபிலாஷைகள் எதையும்திருத்திப்படுத்தக்கூடிய வகையில் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படுமாவென்பது கேள்விக்குரியதொன்றாகும். உதாரணமாக, கீழே தரப்படும் விடயங்கள் சம்பந்தமான தமிழ்மக்களின் அபிலாசைகள் எந்த அளவிற்குபூர்த்தி செய்யப்பட்டுள்ளதென ஆராய்வது அவசியம்.

**‘ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள திட்டங்களையும்...**

**விளக்கங்களையும் ஆராயும்போது**

**மக்களின் உடன்பாடோ அல்லது நிராகரிப்போ**

**அர்த்தமற்றது என்றே கூறவேண்டியுள்ளது....’**

(1) தமிழ் மக்களின் பாரம்பரியபிரதேசங்களிலுள்ள உயிர்களினதும், உடமைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

(2) பொருளியல் சுயாட்சி

(3 அரசியல் சுயநிர்ணயம், சமஉரிமைகளும் அந்தஸ்தும்.

ஒற்றையாட்சி அமைப்பில் ஒரு மாகாணத்திற்கு மிகக்கூடுதலான அதிகாரப்பரவலாக்கம் ஏற்படுமாயினும்; இக்குறிக்கோளைக் அடைவதற்கான வாய்ப்புக்கள் குறைவானதாகவே இருக்கும். ஒற்றையாட்சி அமைப்பில் மிகக்கூடுதலான சுயாட்சி வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொண்டாலும், அவரால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் யாவும் மிகக்குறைந்தளவு சுயாட்சியையே ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது அவையாவும் தமிழ்மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியனவாகக் காணப்படவில்லை உதாரணமாக;

### பாதுகாப்பு

மாகாண காவல் படையானது தேசிய காவற்படைக்கு கட்டுப்பட்டதாகவே அமையும் ஏனெனில்,

(அ) மாகாண காவல்படையின் தலைவர் தேசிய காவல் படையின் தலைவரால் நியமிக்கப்படுவார்.

[ஆ] மாகாண காவல்படை அதிகாரிகள் பதவியுயர்வு மூலம் தேசிய காவல்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(இ) மாகாண காவல்படையினர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் மேல் முறையீடுகளை தேசிய காவல்படை பரிசீலனை செய்வதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளமை.

(ஈ) மாகாண காவற்படைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் யாவரும் தேசிய ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படுவதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளமை. இவ் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் மூவருள் இருவரை மத்தியஅரசாங்கத்தால் நியமிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாகாணங்களில் நடைபெறும் குற்றவியல் செயல்களைத்தடை செய்வதும் கண்டுபிடிப்பதும் தேசிய காவற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாகாண காவல் படையினருக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் மட்டுமே கொடுக்கப்படும். ஜனாதிபதி அவசியமெனக் கருதுமிடத்து எந்தவொரு மாகாணத்திலோ அல்லது மாகாணங்களிலோ அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தவும், தேசிய காவல் படையை அனுப்புவதற்கும் ஆயுதப்படைகளை சேவையில் ஈடுபடுத்தவும் அதிகாரம் உண்டு. இன ஒழிப்பிலீடுபடும் எந்தவொரு அரசாங்கத்திற்கும்இத்தகைய அதிகாரங்களை கொடுப்பது மிகப்பயங்கரமான செயலாகும். குறிப்பு; திறமை அடிப்படையில் தானும் இல்லாவிட்டாலும் குறைந்த படசம் இனவிகிதாசாரப்படிதானும் தேசிய பாதுகாப்புப்படையில் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படும் சிங்கள குடியேற்றங்களும், இனக்கலப்பை ஏற்படுத்துகின்ற குடியேற்றத்திட்டங்களும்;சிங்கள குடியேற்றக்காரர் அரசாங்கத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களை விரட்டியடிப்பதும், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைகின்றது

### பொருளியல் சுயாட்சி

நிதி சம்பந்தமான அதிகாரங்களின் தன்மையினால் ஒரு மாகாணத்தின் சுயாட்சி கட்டுப்படுத்தப்படுகின்றது. அரசியலமைப்பில் உறுதியான காப்பீடுகள் இல்லாவிடின் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற உத்தேச நிதி ஆணைக்குழுவானது மாகாணங்களுக்கிடையில் பாரபட்சமான முறையில் செயற்படமுடியும் ஒவ்வொரு மாகாணமும் மத்திய அரசிடமிருந்து குறைந்தபட்சம் எவ்வளவு நிதியைப் பெறவேண்டுமென்று வரையறை செய்யப்படவில்லை. இப்பொழுதுள்ள அபிவிருத்திச் சபைகளைப் போல மாகாணங்களும் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும். அச்சந்தர்ப்பத்தில் இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் கேலிக்குரியனவாயமையும்.

மத்திய அரசாங்கத்தினுடைய அனுசரணையின்றி மாகாணசபைகள் வெளிநாட்டுக் கடன்களையோ, மானியங்களையோ அல்லது வர்த்தக ரீதியிலான கடன்களையோ, தனியார் முதலீடுகளையோ பெறமுடியாது. இன்று சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் நிலவிவரும் பகைமை உறவுகளைக்கொண்ட சூழ்நிலையில் இக்கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி மாகாண அபிவிருத்தியைக் கட்டுப்படுத்த முடியும். காணி, காணிக்குடியேற்றம் என்பவற்றின் மீது மாகாணசபைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் மிகக் குறைந்தனவாகும். அரசு உடைமையான காணிகளெல்லாம் மத்திய அரசாங்கத்திடமே விடப்படுகின்றன. ஜனாதிபதியே அத்தகைய காணிகளை வழங்கலாம். காணிக்கொள்கை ஒரு தேசிய காணி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் வழங்கப்படும் காணிகளின் அளவும் அவற்றுக்கான இனவிகிதாசாரமும் அக்குழுவினாலேயே நிர்ணயிக்கப்படும். இரு மாகாணங்களுக்கிடையிலான பொது வாகவுள்ள நீர்ப்பாசனத்திட்

(11ம் பக்கம் பார்க்க)

‘பெரி’ஸ்கோப்

## சத்தியமே ஜயம்!

“அவசர நிலைமை - 58”ஐ யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

’77, ’83 கலவரங்கள் அமளிதுமளிப்பட்ட காலங்களில் ஐம்பத்தெட்டை நினைவுகூரும் நிர்ப்பந்தமோ சந்தர்ப்பமோ ஏற்பட்டிருக்கலாம்.

ஆனல்...

ஐம்பத்தெட்டாமாண்டுக் கலவரங்களை ஓர் வரலாற்று இலக்கியமாக வடித்துத்தந்த அந்த தார்ஸி வித்தாச்சிக்கு அன்றுநடந்த கதையென்ன? இன்று இலக்கியக் கலாநிதிப்பட்டம் வழங்கி அவருக்கு நடக்கும் நடப்பென்ன?

வித்தாச்சியின் எழுத்துவலுவை கௌரவிப்பதாக மட்டுந்தான் இந்த ‘மகுடாபிஷேகம்’ நடக்கிறதோ? அல்லது ‘இதுதான் உண்மை’ [This is the Truth] என்றவாறான பகட்டான பிரசுரங்களால் ‘உண்மை’யை ஏற்றுமதி செய்கின்ற கைங்கரியங்களுக்கு ஒருதுணைத் தூணாக இந்த பேனா மன்னரைப் பயன்படுத்தும் நோக்கமோ?

‘டைம்’, ‘நியூஸ்வீக்’, ‘இந்தியா டுடே’ முதலான சஞ்சிகைகளில் இலங்கை இனப்பிரச்னையின் தாத்பரியம் குறித்து அரங்கேறிய ‘அந்தரங்கங்கள்’ அரச வட்டாரங்களின் மனதைப் புண்படுத்தியமையும், அதுபற்றி அவை அங்கலாய்த்ததும் வாஸ்தவமே.

“உண்மையே பேசு நன்மையே செய்” என்ற ஆத்திசூடிக்காலம் மலையேறிப்போன வேளையிலும் உண்மையை மட்டுமே எழுதிய ஒரு பத்திரிகாசிரியரைக் கௌரவிப்பது சிலாகிக்கக்கூடிய விஷயமே. எனினும், ‘அவசரநிலைமை - 58’ எழுதிய மனிதனை இனங்காணுவதற்கு இத்துணை காலம் சென்றிருக்குமாயின், ’77, 83 அமளிகளைப்பற்றி எழுதியவர்களை இனங்காண எத்தனை ஆண்டுகள் செல்லுமோ?

யார் செத்தாலும் சாகாமலிருப்பது உண்மை ஒன்றுதான் ஒருயுத்த காலத்தில் முதல்சாவு [In a War first Casualty is the Truth] நேருவதும் உண்மைக்குத்தான்!


இருந்தபொழுதிலும் ‘அவசர நிலைமை’கள் பற்றி மிக மிக நிஜமான விஷயங்களை வெளியிடுவதில் ‘லங்காபுவத’ கொடிகட்டிப் பறக்கிறது! இதனால் தானே என்னவோ நகைச்சுவை இலக்கியத்துக்கான பரிசு இந்தஆண்டு ‘லங்காபுவத்’ துக்கு வழங்கப்பட வேண்டுமென பல நாடுகள் நோபல்பரிசுக் கமிட்டியிடம் விடாப்பிடியாய் வலியுறுத்தி வருவதாகத் தெரிகிறது!

தார்ஸி வித்தாச்சிகள் கலாநிதிப்பட்டங்களோடு ஆறுதல் பெறவேண்டியதுதான்!

நமது நோக்கு இது!

பி. கு: அந்தக் காலத்திலேயே வெளிநாட்டில் ‘கொழுத்த’ சம்பளத்தில் வேலைவாய்ப்புப்பெற்ற ஒருவர், வெளிநாடு போகும் பட்சத்தில் தார்ஸி வித்தாச்சி ‘Fly By Night’ என்ற புனைபெயரில் ‘ஒப்ஸேவர்’ பத்திரிகையில் எழுதிவந்த அம்சத்தைச் சுடச்சுட அனுபவிக்க முடியாது போய்விடுமே என்ற பயத்தில் அந்த வேலைவாய்ப்பையே துறந்தார். அந்த மனிதர் வெளிநாடு போகவில்லை; ஆனல். வித்தாச்சியை வெளிநாட்டுக்கு விரட்டியடித்த புண்ணியத்தைக் கட்டிக்கொண்டது இந்த தாமதுவீபம தான்!

இன்ரநாஷனல்
கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்
International Communication Complex.




282 A, யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

★ உள்நாட்டு-வெளிநாட்டு தொலைபேசி (Telephone)
★ தொலைத்தொடர்பு (Telex)
★ பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே நிம்மதியாக, நேரடியாக உலகின் எப் பகுதிக்கும் தொடர்புகொள்ள—
★ இரவு-பகல் 24 மணி நேரமும், வாரம் பூராவும் தொடர்ச்சியான சேவையைப் பெற தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே ஒரு நவீன

தகவல் தொடர்பு நிலையம்!

(1777)

## மதுரை சங்கரநாதபுர வீரமாணிக்கத்தேவன் பெரியநாட்டுத்தேவன் நரசிங்கத்தேவனின் பரம்பரையினர் வாழும்

# யாழ்ப்பாணத்தின் இரு பழங்கிராமங்கள்

**வீ**ரமாணிக்கத் தேவன் துறை, பெரியநாட்டுத்தேவன் துறை ஆகிய இரு பழம்பெரும் கிராமங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகடலோரம் சிறப்புடன் அமைந்திருந்தனவாகும்.

மயிலிட்டி என்றும் அயற் கிராமத்துடன் இணைந்து கொண்டிருக்கின்ற இக்கிராமங்களின் அமைப்பினை ஆங்கிலேயரினால் வரையப்பட்ட இலங்கையின் வரைபடங்களிலும் அங்கு வாழும் மக்களின் காணித் தோம்புகள் உறுதி பிறப்புப்பத்திரங்கள் ஆகியவைகளாலும் அறியமுடிகின்றது.

இலங்கையின் வரைபடத்படி (1937ம் ஆண்டுக்கு முந்தியவைகள் தெளிவாகக்காட்டுகின்றன) இவ்விருகிராமங்களும் காங்கேசன்துறையை மேற்கு எல்லையாகவும், பலாலியை கிழக்குஎல்லையாகவும், வடக்கே கடலையும், தெற்கே மயிலிட்டியையும் எல்லையாகக் கொண்டிருக்கின்றன. கடலிலிருந்து தெற்குநோக்கி ஏறத்தாள அரைமைல் அகலமாகவும் காங்கேசன்துறையிலிருந்து பலாலிவரை ஏறத்தாள மூன்று மைல்கள் நீளமாகவும் இக்கிராமம் அமைந்திருந்தன. கிழக்கே வளலாய்க் கிராமம் வரை இவை பரந்திருந்ததாகவும் சிலர் கொள்கின்றனர். மேற்கே வீரமாணிக்க தேவன்துறையும், கிழக்கே பெரிய நாட்டுத் தேவன் துறையும் அமைந்திருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் ஏறத்தாள 1½ மைல்கள் நீளமுடையனவாக இருக்கின்றன.

### மதுரையிலிருந்து வந்தவர்கள்

வீரமாணிக்க தேவன்துறையிலும் பெரியநாட்டுத் தேவன் துறையிலும் நிலவுகின்ற மரபு வழிக்கதைகளின் படி மதுரை மாவட்டத்திலுள்ள சங்கர நாதபுரத்திலிருந்து வீரமாணிக்கவேதன் பெரியநாட்டுத்தேவன் நரசிங்கதேவன் ஆகிய மூன்று சகோதரரும் அவர்களது படையணியும் இங்குவந்தனர் என்றும் மூத்தவர்கள் இருவரும் தங்கள் பெயரை இக்கிராமங்களுக்குச் சூட்டினூர்கள்என்றும் அவர்களும் அவர்களது படையணியும இங்கேவாழத்தொடங்கிவிட்டனர் என்றும்கொள்கின்றனர்.

இவ்வீர மரபினரது வருகை பல்லவர் காலத்தில் என்போரும், சோழர் காலத்திலென்போரும், அதற்கு முந்திய காலத்திலுண்டான என்றும் சொல்லுகின்ரூர்கள். இதனை அறுதியிட்டுச சொல்லமுடியவில்லை இதனைப்பற்றிய ஆராய்ச்சி தேவை.

இவர்கள் வந்தபோது இங்கு இவர்களது வருகைக்கு முன்னரே சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருந்த வேருேர்வீரமரபினரான குருகுலத்தவர்களுக்கும இவர்களுககும் பிற்காலத்தில் கலப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று இங்குள்ள மக்களின் கதைகளில் இருந்து ஊகிக்கமுடிகிறது. இவ்விரு வீரமரபினரது வழித்தோன்றல்களே இக்கிராமங்களில் ஆதிகாலம் தொட்டுவாழ்ந்து வருபவர்கள் என இக்கிராம மக்கள் உறுதியாகக் கொள்கின்றனர்.

வீரமாணிக்க தேவன் துறையில் காணப்படும்பல குறிஞ்சிப் பெயர்கள் அதன் சிறப்பினைக் காட்டுகின்றன. தேவியா கொல்லை, தேவர் குளம், தொண்டைமான் குளம், காவல்கடவை என்பன சிறப்பானவையாகும்.

தேவியா கொல்லையில் கண்ணகை அம்மனின் பழைய ஓர் ஆலயம் இடிபாடுகளுடன் இருந்து இப்பொழுது திருத்தப்பட்டுள்ளது. இதன் ஆதி வரலாறு அறுதியிட்டுச் சொல்லமுடியாதளவு பழமை வாய்ந்ததாகும் இவ்வாலயத்தில் இப்பகுதியில் ஆதிகாலம் தொட்டு வாழ்ந்துவந்த மக்களால் நடாத்தப்பட்ட பொங்கல் ''மடை'' சிறப்புப் பெற்றிருந்ததாகக் கூறுகின்ரூர்கள்.

தேவகுளம், தொண்டமான் குளத்திலிருந்து பெறப்பட்ட நீரால் இக்கிராமத்தில் விவசாயம் செய்யப்பட்டதாகவும் சொல்கின்றனர். இக்குளங்களில் தேவகுளம் அழிந்துவிட்டது. தொண்டமான்குளம் இப்பொழுதும் இருக்கின்றது. இதைவிடப்பல கேணிகள் காணப்பட்டன அவற்றின் அடையாளங்கள் பல இடங்களில் உண்டு.

## எம். ராஜா யோகானந்தம்

வீரமாணிக்க தேவன்துறையில் கடலோரம் அமைந்திருக்கும் கண்ணகை அம்மாள் ஆலயம் மிக மிகப் பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்தினைச்சுற்றி மடாலயங்களும் புகழ்வாய்ந்த ஓர் ஏரியும்இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு. இவ்வாலயம்இங்கு இன்றுமுதன்மைபெற்று மிகச்சிறப்புடன் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் தொடர்ந்து நடைபெறும் திருவிழாக்காட்சிகள் இங்குள்ள மக்களின் சிறப்புக்கு விளக்கம் கூறுவதாக அமைந்துள்ளன.

வேதாரண்யத்திலுள்ள சிவன் ஆலயத்தில் சிலதொண்டுகளை வீரமாணிக்க தேவன் துறை மக்கள் செய்தார்கள் என்பதற்கு இன்றும்ஆதாரங்கள் உண்டு. இங்கு நடைபெறும் தெற்போற்சவம் [கப்பற்றிருவிழா) ஆதிகாலம் தொட்டு இம்மக்களால் செய்யப்பட்டு வந்த கடல் வாணிகத்தினை சிறப்பித்துக் காட்டுகின்றன அன்றைய நாளில் இங்கு பாடப்படும் இவர்களது வீரத்தினையும் கடற்படைச் சிறப்பினையும் எடுத்து இயம்புகின்றது.

கண்ணகை அம்மன் ஆலயத்தின் அருகில் முன்னையன் வளவில் அமைந்திருக்கும் ஆலயம் முன்னையன் ஆலயமாகும் வீரயாணிக்க தேவன்துறைக்கு மேலும் சிறப்பினைத் தரும். இவ்வாலயம் ஆகமமுறைப்படி அமைந்துள்ளது கொடியேற்ற விழா இவ்வாலயத்தின் சிறப்பமசமாகும். இங்கு வழககமாக நிகழும் கந்தசஷ்டிவிரத இறுதியில் நடைபெறும் ''சூர சங்கார விழா'' வீரமாணிக்க பெரியநாட்டுத் தேவன்துறை மக்களால் உணர்ச்சிபூர்வமாக நடாத்தப்படும் ஓர் பெருவிழாவாகும்.

வீரமாணிக்க தேவன் துறையின் ஓர் குறிச்சியான காவலர் கடவையில் வீற்றிருந்த பேய்ச்சி அம்மன் ஆலயம் இப்பொழுது முத்துமாரி அம்மனுக நிர்மாணம் பெற்று வருகின்றது. வருங்காலத்தில் வீரமாணிக்க தேவன் துறைக்கு இவ்வாலயமும் ஓர் சிறடபம்சமாக அமையும்

இக்கிராமத்தில் வாழும் மக்கள் சைவர்களாகும். மிகவும் திடகாத்திரமான உடற்கட்டும். உறுதி வாய்ந்த நெஞ்சமும் உடைய இம் மக்கள் ஆதி நாளில் படைத்தலைவர்களாகவும், படைவீரர்களாகவும், கடல் வணிகர்களாகவும், கடலோடிகளாகவும் விளங்கியுள்ளனர்

கடலோடும் வழியில் கச்சதீவிலும் ஓர் சண்ணகி அம்மன் ஆலயத்தினை இவர்களின் மூதாதையர் அமைத்துப் பரிபாலித்தனர். என்றும் ஐரோப்பியர் ஆதிக்கத்தின், இவ்வாலயம் செல்வாக்கிழந்து அழிந்து விட்டதாகவும், இவர்கள் கொள்கின்றனர்.

இங்கு வாழ்ந்த பெரும்பான்மையான முதியோர்கள் தீட்சை பெற்றவர்களாகவும், குடுமி, காதணி, கடுக்கன் அணிந்தவர்களாகவுமே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களது திருமண வைபவங்கள், இறப்புக் கிரியைகள் மிகவும் பண்பட்டதாகக் காணப்படுகின்றது.

### எலும்புக்கூடுகள்

இங்கு அமைந்துள்ள கலைமகள் வித்தியாலயத்தில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டைகள் அழிந்த நிலையில் காணப்படுகின்றது. அண்மையில் கலைமகள் வித்தியாலயத்திற்கு ஓர் கட்டிடம் அமைப்பதற்காக நிலத்தினை வெட்டியபோது ஒன்றன் மேல் ஒன்ருக பல எலும்புக் கூடுகள கிடந்தன. ஆதிகாலத்தில் இந்நிலம் போர் நிகழ்ந்த இடமாக இருந்ததா? அல்லது எதாவது நோயாக் மக்கள் அழிந்திருக்கலாமா? என்று தெரியவல்லை இதனைப் பற்றும் ஆராச்சிகள் தேவை.

### பெரிய நாட்டு தேவன் துறை

இக்கிராமத்திற்குரிய சிறப்புக்கள் அனைத்தும் பெரிய நாட்டுத் தேவன் துறைக்கும் பொருந்தும். இங்கு சைவர்களும் - கத்தோலிக்கர்களும கூடி வாழ்கின்ரூர்கள் - பெரிய நாடடுத் தேவன் துறையில் மிகப் பழமை வாய்ந்த மருதடி வரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இதன் தெற்கு எல்லையிலுள்ள விநாயகர் ஆலயமும் ஆதிநாள் தொடக்கம் குருகுல தேவர்களால் பூசிக்கப்பட்டுவந்த ஓர் ஆலயமாகும் - காட்டுப்பிள்ளையார் என அழைக்கப்படும் இவ்வாலயம் இப்பொழுது பலாலி மக்களால் பூசிககபடுகின்றது.

இதேபோலவே வீரமாணிக்க தேவன் துறையில் ஓர் அங்கமான ஊரிக்காட்டிலுள்ள மக்களால் பூசிக்கப்பட்டுவந்த கீரிமலையிலுள்ள கிருஷ்ணர் ஆலயம் இப்பொழுது கீரிமலை மக்களால் பூசிக்கப்படுகின்றது. இவ்விரு கிராமங்களிலுமுள்ள ஆலயங்களின் தீர்த்தத் துறையாக பெரிய நாட்டுத்தேவன் துறையின் 'காமாட்சி வாய்க்கால்' என்னும் இடம் அமைந்து சிறப்புப் பெற்றது. பெரிய நாட்டுத் தேவன் துறைக்கு மேலும் சிறப்புத் தருவது இக்கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் காணிக்கை மாதா ஆலயமாகும். இவ்வாலயம்

(11ம் பக்கம் பார்க்க)

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: ஆனி
திகதி: 29 (1986-07-13)
கிழமை: ஞாயிறு
திதி: ஷஷ்டி
பி ப வரை
நக்ஷத்திரம்: உத்தரம்
பி.ப.வரை

### மேடம்

குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். சிலருக்கு மனதில் விரக்தி தென்படும். கடமையில் தடைகள் ஏற்படும். நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ள நேரிடலாம். இவ் வாரம் பொறுமையே நன்று.

### இடபம்

இதயத்தில் அமைதி ஏற்படும். பிதா வழி மூலம் நல்ல செய்தி கிடைக்கலாம். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார். புண்ணிய விடயங்களில் ஆர்வம் பிறக்கும்.

### மிதுனம்

கடமையாற்றும் இடத்தில் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள். பொறியியலாளர்களுக்குப் பொன்னான வாரம். வேண்டிய ஒருவரிடமிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும். சிலருக்குப் புதிய முயற்சியும் கை கூடலாம்.

### கடகம்

செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். நீண்ட நாள் கடன் இவ் வாரம் மீண்டும் வந்து சேரலாம். பிறந்த இடத்தின் பெருமையை நிலை நாட்டலாம். பூமிப்பிணக்கும் நிவர்த்தியாகும்.

### சிங்கம்

இனசனப் பகையுடன் இல்லத்தில் சிறு சச்சரவிற்கு இடமுண்டு. வணிகர்களுக்கு புதிய முதலீடுகளைப் பின் போடுவது நன்று வாய்வுக் கோளாறுக்கும் இடமிருப்பதால் உணவு விடயத்தில் அவதானம் வேண்டும். தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு.

### கன்னி

வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலைகள் அதிகரிக்கலாம். திடீர்ப் பிரயாணத்திற்கும் இடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படக் கூடும். எவ்விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும்.

### துலாம்

மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும். பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். கைவிடப்பட்ட பண வரவு மீண்டும் கிடைக்க

(11ம்பக்கம் பார்க்க)

House Full ! House Full !!

என்ன? திரையரங்கு நிறைந்து விட்டதா?
என்று வியக்கிறீர்களா?

இல்லை! எமது தேசியக் கூழுக்கு
ஒவ்வொரு ஞாயிறும் வாடிக்கையாளர்கள்
அதிகரிக்கின்ருர்கள்.

காரணம் நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை!!!
ஆம், எமது தேசியகூழ் எமது மக்கள் மத்தியில்
பிரபலமாகி உள்ளது,

நீங்களும் இன்று ஞாயிறு காலை
11-30 மணிமுதல் 2-30மணிவரை
வருகைதந்து பருகிப் பாருங்களேன்!
சுவைப்பது உங்கள் பொறுப்பு!
திருப்தியாகத் தருவது எங்கள் பொறுப்பு!!!

இதுமட்டுமல்ல!
எமது தேசிய உணவு வகைகள்:

★ ஒடியல் பிட்டு
★ குரக்கன் பிட்டு
★ குரக்கன் இடியப்பம்

அதி விஷேசம்!
பீச் இன் ஸ்பெஷல்
கடல் உணவு வகைகள் [SEA FOOD]
சூடான பானம் முதல் குளிர் பானம் வரை!

இதுமட்டுமா!
இளைப்பாறி களைப்பாறிச் செல்ல
தங்குமிட வசதிகள்
இவற்றை காற்றுவாங்கி சுழிக்க
வருகை தாருங்கள்! எங்கே?

யாழ் பீச் இன்
(YARL BEACH INN)
139, கடற்கரை வீதி,
[பழைய பூங்கா வீதிச் சந்தி]
யாழ்நகர்.

யாழ் பீச் இன் YARL BEACH INN } இயற்கையின் இன்பச் சோலை

THE SAFEST AND FASTEST WAY
TO TASTY FOODS.

விளம்பர அமைப்பு:- ஜோ. எகட்டன் (செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் யாழ்நகர். [A-739]

## மறைமலையடிகளின் 110-வது பிறந்ததினம்

# தனித்தமிழ் நலங்காத்த தலைமகன்

ஆங்கிலேயர் ஆதிக்கத்துக்கு ஆட்பட்டு, அடிமைப் படுகுழியில் வீழ்ந்து தாய் மொழியாம் தமிழை மறந்து, துறந்து. ஆ கில மொழியில் மோகம் கொண்டு ஆங்கில நாகரிசத்திற்கேற்ற போலி வாழ்வில் அல்லலுற்ற தமிழகத்தில் தனித்தமிழ் நலன் பேண 15-7-1876ல் பிறந்தார் தலைமகன் வேதாசலம் என்ற மறைமலையடிகள்.

அடிகளார் இயற்றிய திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை முகவுரையில் ''எமக்கு ஆண்டு உக [21]; மிக இளைஞனயிருந்த காலம், அப்போதுதான் யாம் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து மாணுக்கர்க்குத் தமிழ் இலக்கண, இலக்கியங் கற்பித்து வரலானதும் அந்நாள்ல் யாம் பழைய தமிழ் இலக்கண, இலக்கிய நூற் பயிற்சியில் மட்டுட்படா விழைவு கொண்டு கருத்தூன்றியிருந்தோம். எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டில் நிரம்பியதெனலாம். இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்நெட்டுருச் செய்தே முடித்தேம். கலித்தொகை, பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், நாலடியார் முதலிய நூல்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப் பெற்றன. இவையேயன்றி, நன்னூல் விருத்க, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை, இறையனுரகப் பொருளுரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச்செய்து முடிக்கப்பட்டனவாகும். கல்லாடம், சீவக சிந்தாமணி, பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை. பொருட் சுவையிற் பெரிதும் மூழ்கியிருந்தும், அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை என்ருலும், அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமதுள்ளதில் வேரூன்றி நின்றன. இங்ஙனமாக விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று, பயின்ற பயிற்சியினுலேயே, செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ்நடையில் எழுதும் திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று'' என எழுதியுள்ளார்.

நுனிப்புல் மேயும் வகையிலே தான் தமிழ் நூல்கள், அந்நாளைய ஆங்கிலக் கல்லூரிகளில் பாடமாகப் போதிக்கப்பட்டன. தமிழ் நூல்களை ஆழமாகக் கற்பதற்கு ஏற்ற வாய்ப்போ வசதியோ இல்லாதிருந்த சூழ்நிலையில் பழம் பெரும் நூல்களைக் கற்பதற்ந எத்துணை இடையரு முயற்சியில் அடிகளார் ஈடுபட்டிருப்பார் என்பதை எண்ணி ஆழ்ந்துணரவேண்டும். ஆங்கிலக் கல்லூரியில கல்வி கற்ற அடிகளார் இன்னல், இடர் காரணமாக பட்டம் பெருமலேயே இடைநடுவில் கல்லூரியை விட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் தமிழ்ப் பயிற்சியேயன்றி ஆங்கிலத்திலும் வடமொழியிலும் கூடப் பெருமுயற்சி செய்து தாமே தேர்ந்து சிறந்த புலமை பெற்றது கற்போருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமது பதினெட்டாவது வயதிலேயே திருமணம் செய்த அடிகளார் முப்பத்தைந்தாவது வயதிலேயே துறவு பூண்டு 'சமரச சன்மார்க்க நிலையம்'' என்னும் பெயராற் ''பொதுநிலைக் கழக''த்தை நிறுவி ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற தமிழரின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழுக்கும், சைவத்துக்கும் இடையருத தொண்டாற்றினர்.

''வடசொற்களும் ஏனைய அயன்மொழிச் சொற்களும் தமிழிற் கலந்தால், தமிழ் மொழியின் இனிமை குறைவதுடன், தமிழ்ச் சொற்கள் பலவும் நாளடைவில் மறைய, அயன்மொழிச் சொற்கள் ஏராளமாகத் தமிழில் நிலை பெற்று விடுகின்றன. இதனுற் காலஞ் செல்லச் செல்லத் தமிழ்ச் சொற்கள் சிறுகச் சிறுக மறைந்தழிகின்றன. இவ்வாறே நிகழ்ந்து கொண்டிருந்தால், தமிழ்மொழியும் இறந்துபோன மொழிகளில் ஒன்ருய் விடுமன்றே!'' என்று கூறித் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் உறுதி பூண்டு கொண்டார்.''

முற்போக்குக் கிணங்கச் ''சுவாமி வேதாசலம்'' எனுந் தம்பெயரை ''மறைமலை அடிகள்'' எனவும், தம்சஞ்சிகை ''ஞானசாகர''த்தை ''அறிவுக் கடல்'' எனவும் மாற்றியமைத்தனர். மற்றும் தாப் எழுதிய புதிய நூல்களைத் தனித்தமிழிலேயே எழுதியும், பழைய நூல்களை மறுமுறை பதிப்பிக்கும்போது வடசொற்களைத் தனித்தமிழ்ச் சொற்களாக மாற்றிப் பதித்துத் தனித்தமிழ்த் தொண்டுபுரிந்து வந்தார்.

ஆங்கில மாயையில் மையல் கொண்டு தமிழை மறந்து, துறந்த போலித் தமிழர்க்கு, தாம் எழுதி வெளியிட்ட ஐம்பதுக்குமேற்பட்ட புத்தகங்கள் பலவற்றின் முன்னுரையை ஆற்றெழுக்குப் போன்ற அழகிய ஆங்கிலத்தில் எழுதி தமிழின் அருமை பெருமையை உணர்த்தினர்.

1938ல் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் (இராஜாஜி) சென்னை மாகாணத்தின் முதன்மந்திரியாக இருந்தபோது கட்டாய இந்தி மொழியை தமிழகத்தில் புகுத்தியதும் தமிழ்ப் பூஞ்சோலையை இந்தி எனும் மந்தி அழித்தொழித்துவிடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த அடிகளார், இந்தி தமிழகத்தில் நுழைந்தால் எத்துணை பேரழிவு ஏற்படும் என்பதனை உணர்த்திட அதுபொதுமொழியாவதற்கு அருகதை அற்றது என்ற தமதுகருத்தை நிரூபிக்க, அம்மொழியின் வரலாறு. மற்றும் அதன் இலக்கிய இலக்கணம் பற்றிய ஆராய்ச்சி செய்து ''இந்தி பொது மொழியா?'' என்ற நூலையும், துண்டுப்பிரசுரத்தையும் வெளியிட்டு தமிழ் மக்களுக்குத் தெளிவையும் துணிவையும் ஊட்டினர். பெரியார் ஈ. வே. இராமசாமிநாயக்கர், அறிஞர் அண்ணு, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் நடத்திய இந்தி எதிர்ப்பு அறப்போரை அடிகளாரே முதல் நாள் தலைமை தாங்கி தொடக்கி வைத்தார். பலர் செய்த தியாகத்தின் விளைவாக அறப்போர் வெற்றி அளித்தது. கட்டாய இந்தி வாபஸ்பெறப்பட்டது.

அடிகளார் மிகச்சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தவர். 30-12-1921ல் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அக்கல்லூரியின் முதல்வர் பண்டிதர் மயில்வாகனனுர் (விபுலாநந்த அடிகளார்) தலைமையில் ''திருக்குறள்'' பற்றி அடிகள் விரிவுரையாற்றினர்.

> ''அற்றை நக்கீரனும் பிற்றை சிவஞான முனிவரும் ஒருருக் கொண்டு வேதாசலனராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கின்றூர்... இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழனுக் கூட்டிய பெருமை அவருக்கே யுண்டு...''
>
> திரு. வி. க.

யாழ்ப்பாணத்துப் பார்வதி வித்தியாசாலையில் ''உயிரின் இலக்கணம்'' என்னும் பொருள் பற்றிப் பேசினர். ''கடவுள் இருதிறமாய் நிற்கும் நிலை'', கடவுளின் ஆண் பெண் உருவநிலை'', ''பண்டைத் தமிழர் நாகரிகம்'' முதலான தலைப்புக்களில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் சொற்பெருக்காற்றினுர்.

அடிகளாரின் நூல்களைச் சமயம், ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கதை, அறிவியல் எனப் பல திறத்தினுங் காணலாம்.

''அற்றை நக்கீரனும் பிற்றைசிவஞானமுனிவனும் ஒருருக் கொண்டு வேதாசலனராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கின்றூர் என்று யான் அவரைச் சொல்லாலும், எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனர் தமிழ்-செந்தமிழ்-சங்கத்தமிழ்-என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவுஞ் செய்தது. இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ்நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனர்க்குண்டு என அறுதியிட்டுக் கூறுவேன்.'' என நாட்டு விடுதலைக்கும் தமிழ் மொழிக்கும் தொழிற்சங்க இயக்கத்துக்கும் தன்னையே அர்ப்பணித்த தியாகி தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனுர் தம் வாழ்க்கைக் குறிப்பிலே அடிகளாரைப் பற்றி எழுதியுள்ளார். தமிழ் உள்ள அளவும் மறைமலையடிகளின் தொண்டின் பெற்றி மங்காது ஒளி வீசும். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்த் தொண்டு!!

''கரவைகிழார்''

---

## பிள்ளைகளை ஊக்குவியுங்கள்

பிள்ளைகளுக்குத் தாங்கள் சிறந்தவர்கள் என்பதை மற்றப் பிள்ளைகளிடம் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற துடிட்பு ஏற்படும், இந்தத் துடிப்பினுல் அவர்கள் சித்திரம் வரைந்து காட்டுவார்கள் வேகமாகப் படித்துக் காட்டுவார்கள். பாட்டுப் பாடிக் காட்டுவார்கள். இவைகளை எல்லாம் சேட்டைகள் என்று எண்ணி நாம் பிள்ளைகளை அதட்டக்கூடாது. பிள்ளைகளுக்கு எதில் ஊக்கம் இருக்கிறது என்பதைப் பார்த்து அவைகளைப் பெற்றோர்களாகிய நாம் பாராட்டவேண்டும். பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும். புத்தகங்களை வாங்கிக் கொடுக்கவேண்டும். சித்திரம் வரையும் பிள்ளைகளுக்கு பெயின்ட் பிரஷ் வாங்கிக் கொடுக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதில் ஆர்வம் இருக்கின்றதோ, அதை அதிகப்படுத்திஞல் அவர்கள் அந்தக் கலையில் சிறந்து விளங்குவார்கள்.

தொகுப்பு;-

க. கனகராசா

---

## 'ராணி'யின் தலைமையில் ஒரு ராஜாங்கம்!

# இது தேனீக்கள் உலகம்

உலகம் எங்குமே முதலாளித்துவம் சோஷலிசம், சர்வாதிகாரம் என்றெல்லாம் பேசிக்கொள்ளப்படுகின்றது.

இந்த மூன்று அமைப்புகளும் தேன்கூட்டில் உண்டு.

தேனீக்கள் மூன்று வகைப்படும் அவை:-

1, ஆண் தேனீ.

2. தொழிலாளர்.

3. ராணித் தேனீ.

இதிலே ஆண்தேனீக்கள் முழுச் சோம்பேறிகள். தொழிலாழித் தேனீக்கள் சேர்த்து வைத்த தேனை உறிஞ்சிக் குடிப்பதே இந்த ஆண்தேனீக்களின் அன்ருடத் தொழில். இந்த ஆண் தேனீக்கள் கூட்டிலே வளரும் ராணித்தேனீயின் அந்தப்புர நாயகர்களாக இருப்பதால் தேனைக் குடிக்கும். இந்தச் சோம்பேறி ஆண்களைக் கண்டு தொழிலாளித் தேனீக்கள் சகித்துக்கொண்டிருக்கும். இதை முதலாளித்துவத்தைச் சகித்துக்கொண்டிருத்தல் என்ற தத்துவத்திற்குள் அடக்கலாம். இந்த ஆண் தேனீக்கள் கருமையானவை. பெரும் கண்களை உடையவை.

### நன்றி மறவாத மாவீரர்கள்

தேனீக்கள் நன்றி மறவாத மாவீரர்கள்; வீராங்கனைகள்.

சுடலை வரை நாம் தாலி கட்டிய மனைவி வரமாட்டாள். நன்றியுள்ள நாய்கூட எம்மைச் சிலநாட்களில்மறந்து விடலாம்! ஆனுல் தம்மை வளர்த்த எஜமானரைப் பின் தொடர்ந்து சுடலைவரை வரும் குணம் இந்தத் தேனீக்களுக்கு உண்டு.

ஓர் ஆங்கிலேயரின் மரணச் சடங்கில் அவர் வளர்த்த தேனீக்கள், ஒரு நாள் வந்து அழுது புலம்பின. சேமக்காலை மட்டும் கூடவே வந்தன. தம்மைவளர்த்த எஜமானர்களின் 'மணத்தைக்' கண்டு பிடிக்கும் தனி ஆற்றல் அவைகளுக்கு உண்டு. வீடு வரை உறவு, வீதிவரை மனைவி—சுடலைவரை தேனீக்கள். இது-தேனீக்கள் மனிதனுக்குத் தரும் முதல் பாடம்!

### ஆண்கள் ஒரு நாள் கொல்லப்படுவர்!

என்ன ஆச்சரியமாக இருக்றதா? ஆம், இது சர்வாதிகாரப் படலம்! தேனீக் கூட்டிலே வளரும் ராணித் தேனீ ஒரு நாள் கூட்டினை விட்டு மேலே பறக்கும். இதனை ஆங்கிலத்தில் ''Nuptial Flight'' என்பார்கள். 'வேலி பாய்வது' என்பது எமது மரபுச் சொற்ரெடரில் விசேடமானது. இதன் அர்த்தத்தை நாம் சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை.

'வேலி பாய்ந்த' இந்த ராணித் தேனீ வானத்தை நோக்கிப் பறக்கும்!

இந்த ராணிக்கு நீரா அல்லது நானு மாப்பிள்ளை எனக் கூட்டில் மதம்பிடித்துக்கிடந்த ஆண் தேனீக்கள் பின் தொடர்ந்து ஓடும்!

ராணித்தேனீ முகில் கூட்டத்தைக் கிழித்துப் பறக்கும்! ஆண் தேனீக்கள் அவள் யாருக்கு எனக் கிட்டக் கிட்டப்பறக்கும்! 'வேலி பாய்ந்த' இந்த ராணித் தேனீயைப் பிடிப்பதற்கு ஓடிய பல ஆண் தேனீக்கள் - ராணியைத் தேடிக்களைத்து, பின்பு மரணித்துப் பூமியிலே வீழ்ந்து இறக்கும்! இப்படி இறக்கும் ஆண்தேனீக்கள் பல! 'அடைந்தால் மகாதேவி இன்றேல் மரணதேவி' என எந்த ஆண் தேனீ அவளைப் பிடிக்கின்

(8 ம் பக்கம் பார்க்க)

திக்கவயல் தர்மகுலசிங்கம்

---

## இரத்தம் எழுதும் வரலாறு

பேசப்பட்டதும்
எழுதப்பட்டதும்
—எத்தனையோ. .
அத்தனையும் வெறும்
வெற்று வேட்டுக்கள்தானே?

வேதனையே உருவாகி
ஏக்கங்களால் இளைத்த
எலும்புக் கூடுகளாய்
நடமாடும் மனிதர்கள்...

காரணம் அற்ற
நியாயம் அற்ற
மரணங்களின்—
நிகழ்வுகள்......

இயற்கை
மௌனமாகத்
தலை குனிந்து நிற்பது
அவமானத்தாலா?
அஞ்சலி செலுத்தியா?

மரணம் நியாயமானது
அது நிச்சயமானது
ஆனுலும் — இங்கே
கொலைகள்—
நியாயப்படுத்தப்படுகின்றன
அப்பாவிகளின் இரத்தம்
உறிஞ்சப்படுகின்றன.

முடிவுக்கு காட்சியாக
சிதறிக் கிடக்கும்
இரத்தத் துளிகளினூடாக
தடம்பதிக்கும்—
சுவடுகள் மட்டுமே
விடிவுக்கு சாட்சியாக

ஒரு புனித வரலாற்றின்
தியாக அத்தியாயங்கள்
இரத்தத்தால்—
எழுதப்படுகின்றன.

—நாவாந்துறை
டானியல் சவுந்தரன்

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

✶ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

கூடுமானவரை தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தாள் வசந்தமலர். தங்கலட்சுமி மாமி வீட்டின் பின் விருந்தை, குசினி, கிணற்றடி என்பதைத் தவிர அவள் வேறு இடங்களில் நடமாட்டத்தைத் துப்பரவாகக் குறைத்துவிட்டாள்.

வீட்டின் முன் பக்கம் போவதோ, அல்லது வீட்டினுள் போவதோ, கேற்றடிக்குப் போவதோ, கோயிலடிக்குப்போய்க் கும்பிடுவதையோ அவள் பூரணமாகக் கைவிட்டுவிட்டாள்.

கோயிலடியில் தங்கலட்சுமி மாமியாலும் அவரது சகபாடிகளினாலும் அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்ட வசந்தமலரைப் பற்றிய கதைகள் புதிய புதிய வடிவங்களில் விஸ்வரூபம் எடுத்து ஊர் முழுக்க இனிய கதைகளாக அடிபடலாயிற்று.

ஆனால்

கதைகளில் பல்வேறுவகையாகத் திரிபு ஏற்பட்டதனால், வசந்தமலர் பொன்னுத்துரை மாஸ்டரோடையும், பொன்னம்பலத்தோடையும் சிநேகிதமாம் என்று கதைத்தனர். அதோடை ''இன்னும் ஆராரோ'' என்றும் அப்படிக் கதைத்தவர்கள் கேள்விக்குறி எழுப்பினார்கள்.

இத்தகைய கதைகளை உறுதி செய்யும் வகையில் அவர்கள் செத்த வீட்டில் நடந்த சில விடயங்களைத் தொடர்புபடுத்தினார்கள்.

''மாஸ்டர் தானே செத்த வீட்டில் அமளியாக ஓடியாடித் திரிந்தவர் அதற்குக் காரணம் இப்பதான் விளங்குது.''

''உந்தச் சுருட்டு முதலாளி பொன்னம்பலம் தான் செத்த வீட்டுச் செலவு பார்த்தவன் அதுக்கும் இதுதான் காரணமாகும்.''

''என்றாலும் வசந்தமலர் விசயகாரிதான்.''

''அவளுக்கு முந்தியே மாஸ்டரோடை சிநேகிதமாம்.''

''பொன்னம்பலத்தின் சிநேகிதமும் அப்பிடித்தான் இருக்கும்.''

இப்படியாக வசந்தமலரைப் பற்றிய தகவல்கள் புதிது புதிதாக வெளிவரத் தங்கலட்சுமி மாமி வீட்டுக்கு வருபவர்கள் தொகையும் அதிகமாயிற்று.

சொந்தக்காரர் தெரிந்தவர்கள் என்ற தோரணையில் அநேகம் பேர் தங்கலட்சுமி வீட்டுக்கு வந்தார்கள் அவர்கள் தங்கலட்சுமியைச் சாட்டாக வைத்து வந்தாலும் உண்மையானகாரணம் வசந்தமலரைப் பார்ப்பதற்காகத்தான்.

வருகின்றவர்கள் ஏதோ விநோதமான பொருளைப் பார்ப்பது போல அர்த்தத்துடன் வசந்தமலரைப் பார்ப்பார்கள்.

பொன்னம்பலத்துக்குத் திரிசங்கு நிலையாக இருந்தது. வெளியில் தலைகாட்ட முடியாது. புவனசுந்தரியின் தொந்தரவு ஒரு பக்கம். அவர் பாடு பெரும் சிக்கலாகப் போய்விட்டது.

தான் செல்லம்மாவைக் கொண்டு கேட்ட விடயம் வெளியில் வராது என்று அவர் நினைத்தார். ஆனால் அந்த நினைப்புக்கு மாறாக அவர் பெயரும் வெளியே வந்துவிட்டது. அது அவருக்குப் பெரிய தலையிடியைக் கொடுத்தது.

கந்தையருக்கு உண்மை தெரியும். அதை வெளியில் கதைக்கமுடியவில்லை அதனால் பேசாமல் இருந்துவிட்டார். இப்படியான விடயங்களில் உண்மையை நிரூபிப்பதுகூட கஷ்டம். மௌனமாக இருந்து மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் நல்லது என அவர் விரும்பினார்.

அவரைப் பொறுத்தவரை இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வசந்தமலரால் தான் முடியும். ஆனால் அதற்கு அவள் சம்மதிக்கின்றாளோ? என்பதை அவரால் ஊகிக்க முடியவில்லை.

புவனசுந்தரி நெருப்பாக நின்றாள். உண்மை எது. பொய் எது என்று விசாரிக்காமலே அவள் பத்திரகாளியாக மாறியிருந்தாள். அன்றைக்கு அவள் தங்கலட்சுமி வீட்டுக்கு வந்தாள். நேரடியாகப் பின் விருந்தைக்கு வந்த அவள்.

''என்னடி தேவடியாள்... மாப்பிள்ளை பிடிக்கிறியோ...'' என்று சத்தம் போட்டாள்.

விருந்தையில் இருந்த வசந்தமலர் கோபாவேசமாக வந்து நிற்கும் புவனசுந்தரியைக் கண்டு ஆத்திரப்படவில்லை. தானும் புவனசுந்தரியின் இடத்தில் இருந்தால் அப்படித்தான் கோபிக்கவேண்டி வரும் என்பதை அவள் உணர்ந்தாள். அதன் காரணமாகப் புவனசுந்தரியின் பேச்சுக்களைச் செவிமடுக்காமல் மௌனமாக இருந்தாள்.

கோபத்தினால் முகம் சிவக்க உடல் படபடக்க புவனசுந்தரி வசந்தமலரை அப்படியே நசுக்கி விடுபவள்போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னடி மாயக்காரி... தாலியறுந்தாலும் இன்னும் குமர்ப்பிள்ளை என்ற நினைப்போ? ஊரில் ஒரு ஆண்பிள்ளையும் முறையாய் இருக்கக்கூடாதோ? அடி நாசமாய்ப் போவாளே, உன்ரை தாலியறுந்தமாதிரி எங்கடை தாலியளும் அறவேணுமோ?......''

''அக்கா விசயம் ஒன்றையும் விளங்காமல், தெரியாமல் கண்டபடி கதைக்கவேண்டாம்'' என்று பதில் சொல்லும்போது மீண்டும் புவனசுந்தரி குறுக்கிட்டாள்,

''என்னடி எனக்கு எல்லாம் தெரியுமடி. அது உன்னிலை பிழையில்லையடி. நீ இருக்கிற இடம் அப்பிடி. இந்த வீட்டில் இருக்கிற எல்லாரும் றோட்டில் போறவனுக்குக் கண்ணை, மூக்கைக் காட்டுகிற ஆட்கள் தானே. இந்த வீடே ஆட்டக்காரியளின்ரை வீடாகப்போட்டுது'' என்று புவனசுந்தரி பேசிக்கொண்டு போனாள்.

வசந்தமலரைப் பேசும் போது பேசாமல் நின்று கொண்டிருந்த சாரதாவும், சுஜாத்தாவும் தங்களை புவனசுந்தரி இழுப்பதைக் கேட்டதும் அவர்களும் அந்தக் களத்தில் இறங்கினார்கள்.

''என்ன இது ஒருத்தி பிழை விட்டால் அதுக்கு நாங்களும் பிழையே... நீங்கள் ஆட்டம் காட்டின காலமெல்லாம் போட்டுது. உங்களை எங்களுக்குத் தெரியாதே. இப்ப வயது போட்டுது என்று பேசாமல் இருக்கிறியள், உங்கடை காலம் முடிஞ்சுது. இது எங்கடை காலம். நாங்கள் ஆடுறம்'' என்று சூடாகப் புவனசுந்தரிக்குப் பதில் சொன்னாள் சாரதா.

வசந்தமலருடன் சண்டைக்கு வந்த புவனசுந்தரிக்கு எதிர்பாராதவிதமாகச்சாரதாவுடனும், சுஜாத்தாவுடனும் வாய்ச்சண்டையிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

புவனசுந்தரிக்கும் சாரதாவுக்கும் வாய்ச்சண்டை ஆரம்பமாகவே வசந்தமலர் பேசாமல் இருந்தாள்.

''நீ... என்ன இப்பவும் குமரியே? உன்னை எனக்குத் தெரியாதே! புருஷனோடை வாழத் தெரியாத பொம்பிளை தானே! அவனோடை கோவிச்சுக்கொண்டு வந்திருந்து கண்ட கழுதையளோடையும் கதைச்

## 17

சுச் சிரிக்கிற மாதிரி நினைச்சுக் கொண்டியோ...'' என புவனசுந்தரி பெரிதாகச் சத்தம் போட்டாள்,

''ஆருக்கடி வாழத் தெரியாது. நீ முறையாக இருந்தால் உன்னுடைய புருஷன் இப்படிக் கண்டவள் பின்னால் திரிவனே? கட்டின புருஷனையும் முறையாக வைத்திருக்கத் தெரியாது. அந்தக் கிழவர் கந்தையர் அவரைத் தன்னும் பார்க்க மனம் வராது வெளிக்கிட்டுவிட்டா மற்றவையளைத் திருத்த.'' என்று சாரதா சொன்னாள்.

''பொத்தடிவாயை யாரைப் பார்த்து முறையாக இருக்கத் தெரியாது என்று சொல்லுறாய். நான் இப்பவும் ஒரு புருஷனோடைதான் இருக்கிறன். இன்னும் பலபேரைப் பிடிக்கவில்லை. உங்களை மாதிரி'' என பதிலுக்குப் புவனசுந்தரி சொன்னாள்.

அவள் அவ்விதம் சொன்னது சாரதாவின் கோபத்தைப் பன்மடங்காக்க கிளர்ந்தெழுந்த சாரதா.

''போடி வெளியே என்று புவனசுந்தரியைப் பார்த்துச் சத்தம் போட்டாள்.

சாரதா வீட்டைவிட்டு வெளியே போகச் சொன்னதால் ஏற்பட்ட மானபங்கத்தினால் எழுந்த உணர்ச்சிகரமான போராட்டங்களினால் கண்ணீர் பெருக, எதுவும் பதில் சொல்லமுடியாது பரிதவித்த புவனசுந்தரி விரைவாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

வசந்தமலருக்குப் புவனசுந்தரியை நினைக்கப் பரிதாபமிருந்தது. அவள் என்னதான் ஆணவக்காரி என்றாலும் பெண் என்ற ரீதியில் அவள் மீது வசந்தமலருக்கு அனுதாபம் ஏற்பட்டது. அது காரணமாகத்தான் பொன்னம்பலத்தின் நடவடிக்கைகளையோ அல்லது செல்லம்மாவைத் தூதனுப்பியதையோ புவனசுந்தரிக்குச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னாலும் அவள் நம்புவாளா? அல்லது மற்றவர்கள் நம்பவிடுவார்களா? என்பது பற்றி வசந்தமலரால் முடிவுக்கு வரமுடியவில்லை.

அன்றைய அந்தப் பிரச்னையில் தங்கலட்சுமி மாமி இல்லாமல் போனது நன்மைக்குத்தான் என வசந்தமலர் நினைத்தாள். மாமி இருந்திருந்தால் நிலைமை மோசமாகப் போயிருக்கும். புவனசுந்தரி மிக மோசமான பேச்சு வாங்கிக்கொண்டுதான் போயிருப்பாள் எனவும் வசந்தமலர் எண்ணினாள்.

சாரதாவும், சுஜாத்தாவும் புவனசுந்தரி மனம் நொந்து போனது பற்றிக் கவலைப்படாமல் அவளுக்குத் தகுந்த பதிலடி கொடுத்து, வீட்டைவிட்டுக் கலைத்ததுபற்றி பெருமையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

''அவவுக்குத் தான் பெரிய சாதிக்காரி என்ற நினைப்பு. இன்றையோடை அவ நல்லா திருந்தியிடுவ'' என்று சுஜாத்தா சொன்னாள்.

★

தன் மகன் பொன்னம்பலமும் செல்லம்மாவும் நடத்திய உரையாடலைக் கேட்டபின்னர் வசந்தமலருக்காக தனது தற்கொலை முயற்சியை ஒத்தி வைத்த கந்தையர் இரண்டு மூன்று நாட்கள் பேசாமல் இருந்தார்.

ஆனால்

வசந்தமலரைப்பற்றி விநோதமான கதைகள் மின்னல் வேகத்தில் ஊர்முழுக்க, பரவி வசந்தமலருக்குப் பெரும் அவதூறு ஏற்படுவதை உணர்ந்த பின்னும் அவரால் பேசாமல் இருக்கமுடியவில்லை.

ஊர்ச்சனங்கள்கதைகளை எப்படி சுவாரசியமாக கதைக்கின்றனர் கதைக்கின்ற விடயங்கள் உண்மையா? பொய்யா? என்பது பற்றிக்கூட ஆராயாமல். நேரில் கண்டது போலவும் கேட்டதுபோலவும் அவர்கள் கதைப்பது கந்தையருக்கு பெரு அதிர்ச்சியைத்தான் தந்தது.

அன்றைக்கு பகல் இரண்டு மணிக்கு மேல் அவர் தங்கலட்சுமி வீட்டுக்கு வந்தார் வசந்தமலரை தனியே காணவேண்டும். என கடவுளை பிரார்த்தித்துக்கொண்டு அங்குவந்து சேர்ந்தார்.

அவர் எதிர்பார்த்ததுபோல தங்கலட்சுமி வீட்டில் இருக்கவில்லை. சாரதாவும் சுஜாத்தாவும் நித்திரைகொள்ளபபோயிருந்தார்கள். கந்தையர் பின் விருந்தைப் பக்கம் வந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# அபரக்கிரியைகள் ஏன்?

இந்துக்களின் செயல், சொல் யாவுக்கும் நிறைந்த விளக்கமும் பொருளும் உண்டு. ஆயினும் அபரக்கிரியைகளைப் பாரம்பரியமாக மரபுவழி பேணிச் செய்து வருகின்றோம். ஆனால் நம்மில் பெரும்பாலும் அவற்றின் விளக்கம் பொருளை அறியாதவர்களாகவே உள்ளோம். இக்குறையினைப் போக்க, காஞ்சிபுரம் ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் இக்கட்டுரை பெரிதும் உதவுகின்றது.

வாழ்க்கையில் ரொம்ப ரொம்பப் புண்ணியம் செய்யணும். அப்ப நமக்குத் தானாகவே ஸ்வர்க்கலோக சஞ்சாரம் கிடைக்கும்.

திவஸமும், தர்ப்பணமும் செய்கிறபோது பூலோகத்திலோ வேறு எங்கோ எந்த ரூபத்திலோ பிறந்திருக்கின்ற நம் மூதாதையர்களுக்கு அது சேமத்தைக் கொடுக்கின்றது. இங்கே நாம் கொடுக்கின்ற எள், தண்ணீர், பிண்டம் முதலானவைகளைப் பிதிர் தேவதைகள் நம் மூதாதையர்கள் எந்த ரூபத்தில் எங்கே பிறந்தாலும் அதற்கேற்ப ஆகாரமாக மாற்றி அங்கே கிடைக்கச்செய்து விடுவார்கள்.

நம்நாட்டு ரூபாயை வெளித்தேசக் கரன்ஸியாக எக்சேஞ்ச் பாங் இருக்கிறமாதிரி பிதிரு தேவதைகள் இப்படி ஆகாரத்தை மாற்றிக்கொள்கின்றார்கள்.

செத்துப்போன உடனேயே எல்லோரும் மறுபடியும் இந்தப் பூலோகத்தில் பிறந்துவிடுவதில்லை. நன்றாக வேலை செய்தால் இன்க்ரிமென்ட் மட்டுமல்ல போனசும் தருகின்றார்கள் அல்லவா ரெம்ப நன்றாகச் செய்தாலோ பிரமோஷனே கொடுத்து மேலே தூக்கி விடுகின்றார்கள். வேலையில் தப்புப்பண்ணினால் இன்க்ரிமென்டை நிறுத்திவிடுகின்றார்கள். பெனல்டி [அபராதம்] வேறு விதிக்கின்றார்கள். ரொம்ப மோசமாகப்பண்ணினால் கீழ் பதவிக்கே தள்ளிவிடுகின்றார்கள். இதேபோல புண்ணியம் பண்ணினவர்களுக்கு இன்க்ரிமென்ட் மாதிரி இந்தப் பூலோகத்தில் சௌக்கியமான இன்னொரு ஜன்மா கிடைப்பதற்கு முன்னாடி ஒரு போனசு கிடைக்கிறது.

ஸ்வர்க்க வாசம்தான் இந்தப் போனசு. ரொம்பப் புண்ணியம் பண்ணியிருந்தால் ஸ்வர்க்கலோகத்துக்கே நிரந்தரமான பிரமோஷன், இப்படியே பாவம் பண்ணியவர்கள் முதலில் பெனல்டியாக நரகலோகத்தில் வசிக்கவேண்டும். அப்புறம் இன்கிரிமென்ட் இல்லாத மாதிரி பூலோகத்தில் கஷ்டத்திலேயே பிறக்க வேண்டும். ரெம்பப் பாவம் பண்ணினால் கீழ் பதவிக்கே போகவேண்டியதுதான் நிரந்தரமான நரகவாஸம்.

அந்திய இஷ்டி என்றால் இறுதியான வேள்வி, மிகவும் உயர்ந்தது. மற்ற ஹோமத்துக்குரிய வஸ்துக்களை நெய்யினால் சுத்திசெய்து அக்கினியில் போடுவது மாதிரித்தான் பிரேதத்தையும் சுத்தம் பண்ணி தகனம் செய்வோம்.

உடம்பு ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் பண்ணப்படுகிறது.

(இக்கட்டுரை இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் அமரர் தண்டிகை சுப்பிரமணியம் அஞ்சலி மலரிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.)

# கடல் வடிக்கும் கண்ணீர்!

வாழ்வின் ஒளிதேடி
வறுமை இருள் நீங்கவெனத்
தூய ஒளி நாடித்
தொடரும் பயணங்கள்
பாவியர்கள் கொண்ட வெறிப்
பாதையினால் திசை மாற
மீளாத் துயிலென்னும்
மரணத்துள் மறைகிறதே!

நம்பிக் கைகோத்து எனை
நாடிடுவர் செந்நீர் சிந்தித்
தம்பி தங்கையர்கள்
தாய் பெண்டு பிள்ளைகளை
வெம்பியள விட்டு
வேதனையைத் தந்து கொழு
கொம்பிழந்த கொடியாக்கும்
கொடுமை தினம் காண்கிறனே

திடமனமும் திண் தோளும்
திரண்ட உடல் உழைப்பும்
கடல் மகளே காக்கும்
கருணைத்தாய் நீ என்றே
படகேறி வருவோரைப்
பாவியர்கள் கொல்ல எந்தன்
உடல் கலக்கும் செந்நீரால்
உளம்நொந்து அழுகின்றேன்.

—நெடுந்தீவு லக்ஸ்மன்

# எமது சிறுகதை



# க று ப் பி

தென் மட்டுவில்
சி. சதாசிவம்

நான் ஏன் ஒரு கறுப்பியாகப் பிறந்தேன் என்று அவள் அதிகமாக ஒன்றும் கவலைப்படவில்லை. ஏனெனில் இந்த உலகில் பிறந்த குறையும் நிறையுமுள்ள பல பிறவிகளில் நானும் ஒருத்தி என உணர்ந்திருந்தாள்.

ஆனல், எல்லோரும் தன்னை ஏன் அடிக்கடி கறுப்பி என நையாண்டியாக அழைக்கிருர்கள் என மனம் வருந்தியதுண்டு. அது கூடச் சில நாட்சளுக்குத்தான். பின்னர் அதைப்பற்றி அவள் கவலைப்படுவதில்லை ஏனெனில் மனிதரில் ஒரு சாரார் இன்னெரு சாராரை இப்படி நையாண்டி செய்து, பட்டஞ்சூட்டுதல் முதலியவற்றில் ஒதுக்கி வைப்பதில் ஒருவித திருப்தியைக் காண்பதை அவள் உணர்ந்திருந்தாள். வள் பெயர் மட்டும் கறுப்பி என்பதல்ல அவள் நிறமும் கறுப்புத்தான். தனக்கு இப்படியான ஒரு பொருத்தமான பெயரை வைத்ததற்கு அவள் தனது அப்புவைச சபிக்காத நாளே இல்லை.

வேலுப்பிள்ளைக் கமக்காரனின் பதின்மூன்று ஏக்கர் தென்னந்தோட்டத்திற்கு முன்பாக உள்ளது அந்தப் பரந்த பசுமையானபுல்வெளி. அதற்கு முன்பாக சுமார் அரை மையிலிற்கு அப்பால் அலைமோதும் ஒருசிறிய குடாக்கடல், அதற்கப்பால் மறுபுறத்தில் ஒரு பெரிய வயல்வெளி இவைதான் கறுப்பியின் தனி உலகின் எல்லைகள்

அந்தத் தென்னந்தோட்டத்து வாசலில் நிற்கின்றது சடைத்து மதர்த்து வளர்ந்து விழுதுகள் விடாத ஆலமரமொன்று அதற்குச் சிறிது தூரத்தில் புல்வெளியின் மத்தியில் இருக்கின்றது ஒரு அழகிய சிறிய தாமரைக்குளம் விழுதுகளின்றி ஒரே ஒரு காலில் மட்டும் சில ஏக்கர் நிலத்தை மூடி நிற்கும் அந்த ஆலமரத்திற்கு நூறு வயதிற்கு மேல் இருக்கும் எனினும் குன்ருத இளமையுடன் திசழும் அந்தமரத்தின் கீழ் காலை இளவெயிலிலே இதமான காற்று உடலை வருடிச்செல்ல கறுப்பி கிடுகு பின்னிக்கொண்டிருக்கும் காட்சியைத்தினமும் காணலாம். அவள் அன்போடு ஆசையாக வளர்க்கும் கறுப்பிப்பசுவும் தினமும் அவளோடு வந்து சிறிதுநேரம் புல் மேய்ந்துவிட்டுப்பின்னர் அவளுக்குப் பக்கத்தில் வந்துபடுத்துக்கொள்ளும். எப்பொழுது எங்கு நின்ருலும் அதன் கவனமெல்லாம் கறுப்பியின் மீதுதான் இருக்கும்.

கொழு கொழு வெனக் கொழுத்து மினுமினுத்த கறுத்த நிறம். நீண்ட குஞ்சம் போன்ற வால். நாம்பன் மாடுகளைப்போல் உருண்டு திரண்ட ஏரி, நீண்டு வளைந்த கூர்மையான கொம்புகள், இவைதான் கறுப்பிப்பசு. அந்தக் கன்னிப்பசுதான் கறுப்பியின் ஒரே ஒரு சொத்து. கறுப்பியின் தற்போதைய இலட்சியம் ஒரு வெள்ளிச்சங்கிலி, சிறிய பித்தளை மணி ஒன்று, கொம்புகளுக்கு ஒரு சோடி வெள்ளிப்பூண்கள், நீலநிறத்தில் ஒரு மணிமாலை வாங்கி கறுப்பிப்பசுவை அலங்கரிக்க வேண்டும் என்பதுதான். அத்துடன் தனக்கும் ஒரு சோடி தங்கமுலாமிட்ட வளையல், ஒரு மூக்குமின்னி வாங்கவேண்டும். இவைக்கென ஓரளவு காசு சேர்த்துவிட்டாள். மிகுதியையும் விரைவில் சேர்த்துவிடுவாள் ஏனெனில் அவளுக்கு வீண் செலவு ஒன்றுமில்லை.

கறுப்பிப் பசுவிற்கு வாய் பேச மட்டும் தெரியாதே ஒழிய மற்றப்படி எல்லாம் விளங்கும். அது அத்தோட்டத்தினுள் வேறு அந்நியர்களையோ, மிருகங்களையோ நெருங்கவிடாது அது கறுப்பிக்கு வாய்த்த ஒரு தோழி மட்டுமல்ல நல்லதொரு மெய்க்காப்பாளனும்கூட. ஒருநாள் மேயப்போன பசு வரவில்லையென்று அவள் பட்டுவிட்ட பாடும் சாப்பாடு கூட இல்லாமல் அலைந்த அலைச்சல் ...

கிடுகு பின்னுவதில் மாத்திரமல்லஎந்தவேலையிலும் மிகவும் கைதேர்ந்தவள் கறுப்பி. தென்னந்தோட்டத்தில் தேங்காய் பொறுக்குதல், துப்புரவு செய்தல், மரமுந்திரிகைப் பழங்கள் சேகரித்தல், நாவற் பழம், ஈச்சம்பழம் சேகரித்து விற்றல், விறகு பொறுக்குதல் போன்ற பல வேலைகளிலும் சுறுசுறுப்பாக உழைத்தாள் இப்படி உழைத்தும் அவள் வரும்படியோ மிகக்குறைவுதான். ஆனல் மனம் நிறைந்த வாழ்வு வாழ்கின்ருள். தனக்கு இல்லாவிட்டாலும் தனது கறுப்பிப் பசுவிற்கு ஒருவித குறையுமில்லாமல் பலவகை உணவுகளைக் கொடுப்பாள் அண்மையில் உள்ள பிள்ளையார் கோவிலில் நண்பகல் பூசைக்காக மணி கேட்டதும் தனது வேலையை நிறுத்தி மானசீகமாக வணங்கிவிட்டு சாப்பிட்ட பின் சிறிது ஒய்வு எடுப்பாள்.

சோளகம் பிறந்துவிட்டால் கறுப்பியின்பாடு ஒரே கொண்டாட்டம்தான். கறுப்பிப்பசுவிற்கும் மிகவும் குஷிதான். சிறிய பசுக்கன்றுகள் போல வெடிவால் கிளப்பிக்கொண்டு அங்கும் இங்கும் ஒடித்திரியும் அதிலும் நாம்பன்மாடுகள் கொம்புக்கு மண் எடுப்பது தனுப்போடுவது கண்டால் ஒரேயடியாக ஒடிச்சென்று இடித்துத் தள்ளிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கும். அப்படிப் பட்ட அடங்காப்பிடாரி கறுப்பிப்பசு.

அந்தப் புல்வெளிக்கு வரும் மாடு மேய்ப்போர், ஆழ்கடலில் மீன் பிடித்துத் திரும்பும் மீனவர், மீன் வாங்க வரும் பலவகை வாடிக்கையாளர், சந்தைக்குச் சென்று திரும்புவோர், தோட்டத்திற்குக் கிடுகு, தேங்காய், மட்டை என்பன ஏற்றவரும் வண்டில்கள், லொறிகள் இப்படி எந்நேரமும் சலசலப்பாகவிருக்கும் அத்தோட்டம்.

ஆனல் மதிய வேளைகளில் பெரும்பாலும் பூரண அமைதி நிலவும். இவற்றின் மத்தியில் ஒரு தனிக்காட்டு ராணியாகக் காலம் தள்ளினுள் கறுப்பி. குணத்தில் குன்றென்ருலும் ஆணவம் கொஞ்சம் அதிகம். யாராவது சேட்டைவிடும் சிறுவர்களைக் கண்டால் கறுப்பிப் பசு கதறக் கதற அவர்களைத் துரத்தி. களைத்து விழுந்தபின்தான் திரும்பி வரும். தன்னைப் பொறுத்தவரை கறுப்பிப் பசுவுமே ஒரு ராணி தான். ஆனல் கறுப்பிக்குப் பாசமுள்ள ஒரு தோழி. விசுவாசம் மிக்க ஒரு அடிமை. கறுப்பியிடம் யாராவது கோபமாகக் கதைத்தாலும் அதற்கு விளங்கிவிடும்.

நெடுநேரம் இருந்து கிடுகு பின்னியதனுல் ஏற்பட்ட நாரி உளைவைப் போக்கச் சிறிது தூரம் நடந்து செல்லத் தீர்மானித்தாள் கறுப்பி.

சோளகக் காற்றினுல் அலை புரண்டு நுரைக்கிறது கச்சாய் கடல். மீனவர் தோணிகள் அடுத்த நாள் மீன் பிடிப்பதற்காக அன்று பின்னேரம் நிரையில் நிற்கின்றன. கடற்கரையில் சிறிது தூரத்திற்கு ஒரே ஈச்சம் பற்றைகள். அழகிய ஈச்சங் குலைகள் வெளிர் பச்சை நிறத்தில் நிமிர்ந்து நின்று வெயிலில் மினுங்குகின்றன. வேறு சில மரங்களில் முற்றிச் சிவந்த காய்கள் மாணிக்கமணிகள் போலக் கறுப்பியைக் கவருகின்றன. சில சில கருநிறப் பழங்கள் கூடத் தென்படுகின்றன. சிலவற்றை உருவி வயிற போட்டாள். இதமாக இனித்தது.

இன்று சிறிது தூரம் கூடுதலாக வேகமாக நடந்துவந்துவிட்டாள். இன்னும் சற்றுத் தூரததில் ஒரு சுடலை மடம் தெரிகிறது. தொடர்ந்து செல்லப் பயந்து திரும்புகிருள். வழியில் ஒரு வாலிபன் துவக்குடன் வந்தான். நல்லவாட்ட சாட்டமான கோற்றமுள்ள அவன் ஒரு மிலிற்றறி உத்தியோகத்தன் போல் உடுப்பில் தென்பட்டான். அவன் மிகவும் கூர்மையாக அவளை நோக்கினுன்.

கறுப்பியாலும் தனது சுழலும் விழிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சாதாரண விழிகளல்ல அவை. வெறியூட்டும் கிறங்க வைக்கும் விழிகள். ஒரு கணநேரச் சலனம் தான். கண்களைத் தாழ்த்தி ஓடோடிவந்துவிட்டாள் தனது இருப்பிடத்திற்கு. இதுவரை எந்த ஆடவனையும் ஏறெடுத்துப் பார்க்காத அவள் அன்று ஏதோ தன்னை மீறிய ஒரு உணர்வில் தனது விழிகளைத் தறிகெட்டோட விட்டுவிட்டாள்.

மறுநாள் இதேநேரம் பிள்ளையார் கோவில் மணியோசை கேட்கின்றது கறுப்பியின் மனம் அடுத்த நாள் கோவிலில் வருஷப் பொங்கல் விழாவிலே லயித்திருக்கின்றது. அவள் தனது பசுவுக்கும், தனக்கும் பூணுரம் வாங்கப் பணம் சேர்த்துவிட்டாள். கோவில் திருவிழாவில்தான் அவற்றை வாங்குவாள். நீல நிற மணிகளை ஒரு வெள்ளிச் சங்கிலியிற் சேர்த்துக் கழுத்தைச் சுற்றிக்கட்டி, ஒரு மணியும் சில வெண்டயங்களும் வாங்கிக் கட்டி, கொம்புகளில் வெள்ளிப் பூண்களுடன் கறுப்பிப்பசுவை அவள் கண்டு இன்புறும் நாள் நாளை என நினைக்க அவள் உடல் சிலிர்க்கின்றது, பொங்கல் விழாவுக்கு முதல் நாள் ஆயினும் அடியில் சந்தடியே இல்லை. சோளகக்காற்றின் வேகம் சற்றே குறைந்து கடலும் சிறிது அமைதியாக இருக்கிறது அந்நேரம்.

வேலைக்களைப்பில் சற்றுக் கண்ணயர்ந்த கறுப்பி திடீரெனத் தன்னை யாரோ தூக்கிச் செல்வதை உணர்ந்து அலறினள். கண்ணைத் திறந்தாள். அவன் தான் நேற்றுவந்த ஆமிக்காரன். வெறிபிடித்த நாய் அவளை இறுகப்பிடித்துக் கொண்டு பிசாசு வேகத்தில் ஓடுகிருன்.

''ஐயோ! ஐயோ! காப்பாற்றுங்கள், ஆமிக்காரன் கொல்லுகிருன்' கறுப்பி ஒலமிடுகிருள். ஒருவருமே இல்லை. அவள் குரல கடல் அலைகளுடன் சேர்ந்து சப்திக்கின்றது.

கொஞ்சத்தூரத்தில் தன்னை மறந்து பனங்காய் பிய்த்துக் கொண்டிருக்கும் கறுப்பிப்பசுவிற்கு இவ்வலக்குரல் கேட்கிறது. அது அம்புபோல் பாய்ந்து அவர்களை அணுகுகிறது. ஆனல் அவனே வெகு வேகமாக ஒரு பாழடைந்த வீட்டிற்குச் சென்று கதவை அடைத்துவிடுகிருன்.

''ஐயோ, உதவி, உதவி!'' என்ற அவலக்குரல் வந்து கொண்டேயிருக்கிறது.

கறுப்பிப்பசு வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறது. பாவம் என்ன செய்யும் அந்த வாயில்லாச் சீவன்? சுவரில் தலையை மோதுகிறது. உள்ளே ஒரு மிருகம் கறுப்பியுடன். வெளியே ஒரு மிருகம் கறுப்பியை மீட்க.

கறுப்பியின் அவலக் குரல் ஓய்ந்துவிட்டது. சத்தமே இல்லை அவன் வெளியே வருகின்ருன். கறுப்பிப் பசு ஒரே ஆவேசத்துடன் அவனை மோதி எறிந்து தனது கூர்மையான கொம்புகளால் கிழிக்கின்றது. எங்கும் இரத்தம். அவன் பெரிய அலறலுடன் மடிகிருன். வாயால் நுரை தள்ளுகிறது. எல்லா ஆவேசங்களும் அடங்கிய கறுப்பிப்பசு அமைதியாகக் கண்ணீர் விடுகின்றது. கச்சாய்க் கடல் மீண்டும் இரைந்து ஓலமிடுகிறது.

(யாவும் கற்பனை)



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## செருக்கு

ஒருநாள் ஒரு நாட்டின் பிரதம மந்திரி தனது வண்டியில் சென்றுகொண்டிருந்தார்.

அவரது வண்டிச் சாரதியின் மனைவி தனது வீட்டு வாசலில் நின்று பிரதம மந்திரி போவதை அவதானித்துக் கொண்டிருந்தாள். தனது கணவன் பெரும் இறுமாப்புடனும் செருக்குப் பார்வையுடனும் வண்டியைச் செலுத்திக் கொண்டிருப்பதை அவள் கண்டாள்.

வண்டிச் சாரதி தனது வீட்டிற்கு வந்தபொழுதுதான் அவனைவிட்டுப் பிரிந்துசெல்லப் போவதாக அவனது மனைவி கூறினுள்.

'ஏன்' என்று கணவன் அவளைக் கேட்டான்.

''பிரதம மந்திரியை நாடு முழுவதும் தெரியும். அவர் செல்வமானவர், அப்படியிருந்தும் அவர் எதுவித பகட்டுமின்றி தன்னடக்கமுள்ளவராக இருந்தார். ஆனல் நீ ஒரு வண்டிச் சாரதி. அப்படியிருந்தும் உன்னை பெரிய மனிதன் என்று நினைத்து இறுமாப்புடன் காணப்பட்டாய். அதனுல் தான் நான் உன்னைவிட்டுப் பிரிந்துவாழ விரும்புகின்றேன்.''

அவள் வேதனையுடன் கூறினுள்.

இதன்பின்பு அவளது கணவன் மிகவும் தன்னடக்கத்துடன் நடந்து வருகின்ருன். பிரதம மந்திரிக்கே அவனதுபோக்கில் மாற்றம் தெரிந்தது. இந்த மாற்றத்திற்கான காரணத்தை அவர் கேட்டார். வண்டிச் சாரதி உண்மையைக் கூறினுன்.

பிரதம மந்திரி வண்டிச்சாரதிக்குப் பெரும் உத்தியோகப் பதவிக்குச் சிபார்சு செய்தார்.

## ஒளி

''எனக்கு எழுபது வயதாகிவிட்டது. படிப்பதற்கு ஆவலாக இருக்கின்றது. அதிக புத்தகங்களை வாசிக்க ஆசைப் படுகின்றேன். ஆனல் இந்த முயற்சி காலங்கடந்தது என்று எண்ணுகின்றேன்''

இவ்வாறு ஒரு பிரபு தனது குருட்டுப் பாடகனுக்குக் கூறினுர்.

''அப்படியென்ருல் ஒரு மெழுகுவர்த்தியைப் பற்ற வைக்கவேண்டியதுதானே''

—பாடகன் ஆலோசனை கூறினுன்.

''நீ ஒரு குடிமகன். நான் உன் எஜமான். என்னைக்கிண்டல்செய்ய உனக்கு எப்படித் துணிவு வந்தது? உனக்கு அவ்வளவு திமிரா?''

—கோபாவேசமாகக் கர்ச்சித்தார் பிரபு.

''நான் குருட்டுப் பாடகன். தங்களை நான் கிண்டல்செய்யவில்லை. எனக்கு அவ்வளவு துணிவுமில்லை.''

—பாடகன் மறுதலித்தான்.

''இல்லாவிட்டால் ஏன் அப்படிக் கூறினுய்?''

'ஒரு மனிதன் தன் வாலிப வயதில் படிப்பதற்கு ஆவலுடையவனுக இருந்தால் அவனது எதிர்காலம் காலைச் சூரியனைப்போல பிரகாசமுடையதாக இருக்கும். அவன் நடு வயதில் படிப்பதில் ஈடுபட்டால் அது மதிய வேளைச் சூரியனைப்போன்றிருக்கும். அவன் வயது முதிர்ந்த காலத்தில் படிக்க ஆரம்பித்தால் அது ஒரு மெழுகுவர்த்திச் சுடரைப் போன்றிருக்கும். இருட்டில் தட்டுத்தடுமாறித் தேடுபவனுக்கு அந்தச்சுடரொளியாவது பயன் கொடுக்குமல்லவா?''

—பாடகன் நிதானமாகக் கூறினுன்

அவனை எப்படிப் பாராட்டுவது என்று பிரபுவுக்குத் தெரியவில்லை.

பாடகனின் கண்களில் ஒளி இல்லைத்தான். உள்ளத்தில்?

**ஆரம்பக் கல்வி**

# ஒல்லாந்தர்கால அபிவிருத்திகள்

(முன் தொடர்ச்சி)

ஒல்லாந்தர் ஆட்சியில், இலங்கையில் கல்வி முன்னேற்றத்திற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவர்கள் புரட்டத்தாந்து கிறீத்தவ சமயத்தவர்கள் இந்நாட்டில் ஓர் ஒழுங்கான, ஒருங்கிணைக்கப்பட்ட கல்வியமைப்பை உருவாக்குவதற்கு முயன்றவர்கள் என்ற வகையில், இலங்கைக் கல்வி வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் முக்கியமானதாக உள்ளது.

லாந்தரும் பயன்படுத்தினர். பாடசாலையில் சேரும் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டுக் கிறீத்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். இக்காலக் கல்வி முறையில், கிறீத்தவ தேவாலயமும் பாடசாலையும் ஒருங்கிணைக்கப்பட்டன.

ஆரம்ப பாடசாலைகள் கல்வி போதிப்பதுடன், பல்வேறுகருமங்களுடன் ஈடுபாடுகொண்ட முகவர் நிலையங்களாகவும் தொழிற்பட்டன. அரசினால் நிறுவப்பட்ட பாடசாலைச்

## கு. சோமசுந்தரம்

(பிரதம கல்வி அதிகாரி)

ஆரம்பக் கல்வி தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. ஆரம்பக்கல்வியையளித்த கோயிற்பற்றுப் பாடசாலைகளின் தொகை அதிகரிக்கப்பட்டது. அரசு முதன் முறையாக, இலங்கையில் ஆரம்பக் கல்வியையளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதும் இக்காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக்கல்வி ஆறு வயது நிரம்பிய சிறுவர்களுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டது. பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கும் முறையும் கொண்டு வரப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளின் உள்நோக்கம் மதமாற்றமாக இருந்தபோதிலும், கல்வி வளர்ச்சியும் ஏற்பட்டது. கல்வியை மதமாற்றத்திற்குக் கருவியாகவே ஒல்லாந்தரும் பயன்படுத்தினர்.

சபை உறுப்பினர்கள், பாடசாலை மேற்பார்வையுடன், அப்பாடசாலையை மையமாகக் கொண்டு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் மேற்பார்வை செய்தனர். ஞானஸ்நானம், மதமாற்றம் என்பன கவனிக்கப்பட்டன. காணிப் பதிவுகள், திருமணப் பதிவுகள், நீதி விசாரணைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. கட்டாய ஆரம்பக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது.

மதம் மாற்றப்பட்டவர்கள் தொடர்ந்தும் அம்மதத்தில் விசுவாசமாக இருப்பதற்கு வழிசெய்யும் வகையிலும் கல்வியமைந்திருந்தது. மதமாற்றத்திற்கு உள்ளூர் மக்களை அவர்களின் மொழி மூலம் அணுகுவதே சாலச் சிறந்தவழி என்று கொண்ட ஒல்லாந்தர் கோயிற்பற்றுப் பள்ளிகளில் தாய்மொழியில் கல்வியையளித்தனர், மதபோதகர்களையும் சுதேச மொழிகளைக் கற்கச் செய்தனர்.

பெண்பிள்ளைகளும் அடிப்படை ஆரம்பக் கல்வியைப் பெறவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ஆயினும் இவர்கள் பத்து வயதினை அடைந்ததும் பாடசாலையை விட்டு விலகவேண்டியிருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே 40 க்கும் அதிகமான ஆரம்பப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. தெல்லிப்பழையில் 1658 ஆம் ஆண்டுதேவாலயம் அமைக்கப்பட்டு, வண. பிலிப் பட்டேயுஸ் என்பவரால் சீர்திருத்திய கிறீஸ்தவ மதம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது எனக் குறிப்புகள் கூறுகின்றன. பாடசாலையும் அங்கு தொடங்கப்பட்டது. இலங்கையின் ஏனைய ஆணைப் புலங்களை விட, யாழ்ப்பாணம் கல்வியில் அதிக முன்னேற்றம் கண்டது. கி. பி 1786 இல் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் 35 963 மாணவர்கள் கல்வி கற்றனர்.

எழுத்து, வாசிப்பு, கணிதம், சமயம், இசை என்பன ஆரம்பக் கல்விப் பாடவிதானத்தில் இடம்பெற்றிருந்தன. வாய்மொழி மூலம் போதனை நடாத்தப்பட்டாலும், மாணவர்களுக்கு வாசிப்பு. எழுத்து ஆற்றல்கள் வளர்க்கப்படவேண்டும் என்ற எண்ணமும் உருவானது. இதனால் முதன் முதலாக அச்சு யந்திரங்கள் நிறுவப்பட்டு, பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. பாடநூல்களை அச்சிட்டுவெளியிட்டதன் மூலம், கல்வி விருத்தியும், அநேகம் பேருக்குக் கிடைக்கும் வாய்ப்பும் பெருகின.

திறமைமிக்க உயர்வகுப்பு மாணவர்களைக் கொண்டு ஆரம்ப வகுப்புகளுக்குக் கற்பிக்கும் சட்டாம்பிள்ளை முறையும் இக்காலத்தில் கையாளப்பட்டது. ஆசிரியர் பற்றாக்குறையை இது ஓரளவிற்கேனும் நீக்கியது.

ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர் அவர்களுக்கு உரிய வேதனமும் அரசினால் வழங்கப்பட்டது. கல்வி, நிருவாக முறை, மேற்பார்வை முறை என்பன தோன்றின. மாணவர் வரவு, கல்வித்தரம் என்பன கவனிக்கப்பட்டன. பாடசாலைகளுக்கும் சமூகத்திற்கும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. கல்வியில் அரசு நேரடியாக ஈடுபட்டது. கட்டாயக் கல்வி, தாய்மொழிக் கல்வி என்பன பேணப்பட்டன இந்த வகையில் 18-ம் நூற்றாண்டில் உள்ளூர் மக்களின் கல்வியில் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டது.

ஆரம்பப் பாடசாலைகள் திண்ணைகளிலும் மரநிழல்களிலும் நடைபெற்ற நிலை மாறி, ஒல்லாந்தர் காலத்தில் உறுதியான கட்டிடங்கள் அமைக்கப்பட்டு ஆங்கு நடாத்தப்பட்டன. சுவரோரங்களில் கற்களால் அமைக்கப்பட்டவாங்கு இருக்கைகளில் மாணவர்கள் அமர்ந்து கல்வி கற்றனர்.

ஒல்லாந்தர் காலக் கல்வியின் பிரதான நோக்கங்களாக நாட்டு மக்களைக் கிறீஸ்தவ சமயத்திக்கு மாற்றுதல். தமது ஆட்சியையும் செல்வாக்கையும் நிலைபெறச் செய்தல் என்பன அமைந்திருந்தாலும் இக்காலப் பிரிவில் ஆரம்பக் கல்வி தொடர்பாகப் பல புதிய நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டதன் விளைவாகக் கல்வி அபிவிருத்தி ஏற்பட்டது என்பதை மறுக்கவியலாது.

(மிகுதி அடுத்த வாரம்)

## பராபரச்சிந்து பதினைந்து

எப்பவோ எம்தலையில் எழுதிவிட்டாய் யாமறியோம்
இப்போ தனுபவிக்கும் இவைதானோ பராபரமே

பொல்லாப் பொன் றில்லையென்று போதித்தாய்
மகிழ்ந் திருந்தோம்.
எல்லாம் இழந் தழிந்து ஏங்குவதேன் பராபரமே

அவனன்றி ஓரணுவும் அசையாது என்றறிந்தோம்
அவனறிந்து செய்வதனை யார்க்குரைப்போம்
பராபரமே

அன்பால் உலகனைத்தும் ஆக்கமுறும் இன்று இனத்
தன்பால் உலகுயிர்கள் அழிவதுகாண் பராபரமே

எல்லாம் உன்செயலே என்றிருந்தோம் இன்றிங்கு
செல்லடித்துத் தாக்குவதும் திருவுளமோ
பராபரமே

நாளொன்றில் நூறு நரர்கள் பலி ஆகுவதை
ஏனென்று கேட்பார் எவருமில்லைப் பராபரமே

பிறப் புரிமை கேட்டுப் பேசினால் கொதித் தெழுந்து
அறக் கொடுமை செய்து அடக்குவதேன்
பராபரமே

எல்லார்க்குஞ் சமநீதி எல்லாமே தர்மிஷ்டம்
சொல்லாலே வஞ்சச் சூழ்ச்சி அன்றோ பராபரமே

குண்டாலும் வாளாலும் குமுறும்வான் பரியாலும்
கொன்றாளும் நீதி குறித்தாயோ பராபரமே

சும்மா இருந்திடுதல் சுகமிலைத்தான் ஆயின் நாம்
சும்மாய் இருக்கச் சுடுகின்றார் பராபரமே

பொம்பர் தலைமீது போடும் எரிகுண்டால்
இம்பர் சுடுகாடாய் எரியுதுகாண் பராபரமே

கைவேறு கால்வேறு கண்வேறாய்ப் பிய்த்தெடுத்துச்
செய்யும் வதைகளினைச் செப்புவதோ பராபரமே

கறுத்த உடையினிற் பேய்க் கணங்களினை ஏவிஅவை
படுத்தும் கொலைகளினைப் பாராயோ பராபரமே

சின்னஞ் சிறிசுகளும் சீரிளமைக் கன்னியரும்
சன்னங்கள் பாய்ந்து சாவதுகாண் பராபரமே

எல்லாமும் இங்கு எப்டவோ முடிந்ததெனும்
சொல்லாலே நாமும் சுகம் காண்போம்
பராபரமே

'தில்லைச்சிவன்'

**சபாஷ் ஸ்ரீஎச்!**

ஸ்ரீஎச். என்பவர் ஒரு முஸ்லிம் இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தவர். போராட்டத்திற்கு அவர் அளித்த நிதி ஒரு கோடி ரூபாய்.

## புத்தகம் சேர்ப்பது கலை

சிலர் தபால் தலைகளைச் சேர்க்கிறார்கள் சிலர் பேனாக்களைச் சேர்க்கிறார்கள். சிலர் பூச்சட்டிகளைச் சேர்க்கிறார்கள். இப்படிப் பொழுதுபோக்காக எதையாவது சேர்ப்பது என்பது நம் நாட்டிலும் இன்று நிறைந்த அளவில் பரவி வருகிறது. காசுகளைச் சேர்த்து வைப்பவர்கள், பழைய காசுகளை ஏகப்பட்ட விலைக்கு விற்கிறார்கள் புகழ்பெற்ற மனிதர்களுடைய கையெழுத்துக்களைச் சேர்த்துவைத்தால் பிறகு இவை ஏகப்பட்ட விலைக்குப் போகிறது. இதைப் போலப் புத்தகங்களைச் சேர்த்து வைப்பது பலருக்கு இப்போது புதுப் பொழுதுபோக்காகி வருகிறது. ஒவ்வொருவரும் நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் சொந்தமாகப் புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வருகிறார்கள். மற்றப் பொழுதுபோக்குகளைக் காட்டிலும் இந்தப் பொழுதுபோக்கால் நாட்டிற்கும், நல்லவர்களுக்கும் பயன் இருக்கிறது.

தொகுப்பு:
க. கனகராசா.

**சப்பாத்து அளவாக இருக்கவேண்டும்**

அளவில்லாத சப்பாத்துக்களை அணிவதால், தலையிடி, நாரிப்பிடிப்பு, சிறுநீரகத்தாக்கம் ஏற்படுகிறது. அளவான சௌகரியமான சப்பாத்துக்களை அணிபவர்கள் உடல் ஆரோக்கியத்துடன்வாழ்கிறார்கள் கால்களை சுத்தமாக வைத்து, சுத்தமான காலுறை அணிந்து, சப்பாத்துப் போடுவதே ஆரோக்கியத்துக்கு சிறந்த வழி.

—'வுமன்'

## தொடர் நவீனம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தையில் வசந்தமலர் அமர்ந்திருந்தாள் பக்கத்தில் சங்கரன் இருந்தான்.

கந்தையரைக் கண்டதும் வசந்தமலரின் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது.

''வாருங்கோ அப்பு, வாருங்கோ சன காலத்துக்கு பிறகு. உங்களைக் காண வேண்டியிருக்கு'' என்றாள் வசந்தமலர்.

கந்தையர் அவளை உன்னிப்பாக பார்த்தார். முன்பை விட நன்றாக மெலிந்து கண்கள் தாண்டு உற்சாகம் இல்லாமல் காணப்பட்டாள்.

''எப்பிடி இருக்கிறாய் பிள்ளை ''திண்ணையில் அமர்ந்தவாறு கந்தையர் கேட்டார்.

''எனக்கென்ன அப்பு இருக்கிறன்..'' என்று அலட்சியமாக பதில்சொன்னாள் வசந்தமலர். அவள் மனதில் மண்டிப் போய் கிடந்த துயர இருளை கோடிட்டுக் காட்டுவனவாக அந்த வார்த்தைகள் அமைந்தன.

''என்ன பிள்ளை செய்யிறது. சில செயல்கள் இப்படியாகவும் அமைந்துவிடுகின்றன. காலமும் சரியில்லாவிட்டாலும் அப்படித்தான்...'' என கந்தையர் சொன்னார்.

''வேதனைப்படுகின்றவர்களை மேலும் துன்பப்படுத்துவது தான் கடவுளின் வேலையாக இருக்கு '' என வசந்தமலர் கூறும்போது அவள் கண்கள் கலங்கின.

''பிள்ளை இப்படியானவேளைகளில் அமைதியாக இருக்க வேணும் ..''

''எப்படியப்பு அமைதியாக இருக்கவேணும். என்ரை மனம் படுகின்ற வேதனையை யார் உணருவினம் நரம்பில்லாத நாக்கினால் கண்டபடி கதைக்கிறதே'' என்று வசந்தமலர் நாத்தழுதழுக்க கூறினாள்.

கந்தையருக்கு பெரிதும் சங்கடமாக போய்விட்டது. எப்படி வசந்தமலருக்கு சமாதானம் கூறுவது என்று தவித்தார்.

''வசந்தமலர் எனக்கு எல்லாம் தெரியும். ஆனால் நீ உப்பிடி தனிய இருந்தால் ஆட்கள் நெடுக உப்பிடித்தான் கதைப்பினம். ஆனபடியால் நீ ஏதாவது ஒரு வழிவகுக்க வேண்டும்''

''நான் என்ன அப்பு செய்யிறது''

''வேறொரு கலியாணம் செய்யிறது தான் நல்லது''

''அப்பு அதைவிட சாவது மேல்'' என்று சொல்லிவிட்டு வாயைப் பொத்திக்கொண்டே அழத்தொடங்கினாள்.

(தொடரும்)

## இது தேனீக்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

றானே அவனே அவளின் காதல் கணவன்! சில ஆண் தேனீக்கள் தானுண்டு தன்பாடுண்டு என்ற பாணியில் தேனுண்டு மயங்கிக் கூட்டில் இருக்கும். இவைகள் ஆண்களுக்குள் கோழைகள்!

இறந்துபட்டவர்களும், காதல் மணவாளனும் போக இனி இருக்கும் ஆண்கள் மிகவும் பரிதாபமானவர்கள். ராணித் தேனீ மணவாளனைத் தேர்ந்து எடுத்ததும் கூட்டில் இருக்கும் தொழிலாளித் தேனீக்கள் அவளைத் தமது ராணியாக ஏற்றுக்கொள்ளும். அதே சமயத்தில் கூட்டில் போட்டியாக வளர்ந்துவரும் ராணித் தேனீக்கள் அழிக்கப்படும். அத்துடன் இவ்வளவு காலமும் மாமலரைக் காணாது தேன் உண்டு திளைத்த ஆண் தேனீக்கள் தொழிலாளி தேனீக்களால் அழிக்கப்படும். இன்றேல் அடித்து விரட்டப்படும். தொழிலாளர் வர்க்க ஆட்சி இனிமேல்தான் அங்கு நிலைநிறுத்தப்படும்.

ராணித்தேனீ முடிசூட்டப்பட்ட பின்பு அவளுக்கு 'மேற்ரன்' நியமிக்கப்படுவாள்.

சாப்பிடுவதிலிருந்து சகல வழிகளிலும் அவள், ராணிக்கு உதவி புரிவாள் 'பெல்' அடிக்கச் சாப்பாடு 'விசில்' அடிக்கக் குளிப்பு என்ற மாதிரித்தான்! அப்படி என்றால் இந்த ராணிக்கு ஏன்தான் இவ்வளவு மரியாதை?

**ராணியில்லாவிடில் நரம்புத் தளர்ச்சி**

அவனின்றி உலகில் ஓரணுவும் அசையாது ராணி இன்றித் தேன்கூடு இயங்காது.

இந்த ராணியின் உடலில் ஒரு திரவம் (Secretion) சுரக்கின்றது. இந்தத் திரவத்தில் தொழிலாளி தேனீக்களின் கைகள் ஒரு நாளைக்கு ஒரு விநாடியாவது படவேண்டும். அந்தத் திரவத்திலே ஒரு நாளைக்குத் தொடாவிட்டால் இந்த தொழிலாளித் தேனீக்களுக்கு நரம்புத் தளர்ச்சியுண்டாகும்! அவைகளால் செயல்படவே முடியாது!

எப்படி இந்தத் தேனீ உலகம்?

புதிய ராணி தெரிவுசெய்பட்டதும் 'கிழவர்'களாகிவிட்ட தொழிலாளித் தேனீக்களை விரட்டியடிக்கும் திட்டம் ஒன்று இளைய தொழிலாளர்களால் தீட்டப்படும்! இந்தச் சதித்திட்டம் பல சமயங்களில் 'கிழவர்'கட்குத் தெரியவரும். விரட்டப்படும் முன்பு வெளியேறினால் போதும் என்ற ரீதியில் இதை அறிந்த கிழட்டுத் தொழிலாளித் தேனீக்கள் தாம் வாழ்ந்த கூட்டைக் காலி செய்து வேறு இடங்களுக்குப் பறக்கும்.

அடுத்த வாரம் இன்றைய சூழலில் பயன்தரும் - பணம் தரும் 'தேனீவளர்ப்பு' பற்றிய விபரங்கள் வெளியாகும்.

## உடனடியாகத் தேவை

பியர் வெற்றுப்போத்தல்கள் அல்லது ஃ பாணி அடைக்கும் போத்தல்கள் உடனடியாகத் தேவை. ஆகக்கூடிய விலை கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு உடனடியாக

**பணிப்பாளர்,**
அருள் ஆச்சிரமம், 5, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி:24081
என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

[A 782]


## 'பயணங்கள் தொடர்கின்றன'

யாழ்ப்பாணம், ஞாயிறு இன்றைய காலகட்டத் தில தரமான முறையில் ரி வி திரைப்படமாக 'பயணங்கள் தொடர்கின்றன' எடுக்கப்பட் டுள்ளது என்று ஈழத்துச் சினிமா நடிகரும் ரி வி திரைப் படநடிகருமான திரு வி. எஸ் குமார சுவாமி பாராட்டு கூட் (10ம்பக்கம் பார்க்க)


## வீடியோ படத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகைகள் உடனடியாகத் தேவை

விரைவில் தயாரிக்க இருக்கும் வீடியோ படத்தில் நடிப்பதற்கு ஆற்றல்மிக்க நடிக, நடிகைகள் உடன் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

நேரம் 9-30 முதல் 12-00 மணிவரை

**மேஜர்ஷண்**
**மணிக்குரல் விளம்பர சேவை**
**பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.**

(A-781)

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடனடியாக எம் முகவர் உங்களைக் கூட்டிச் செல்வார்.

காரியாலயத்தில் உடனடியாக தொடர்பு கொள் கொள்ளுங்கள்.

★ சவுதி அரேபியா ★ மத்தியகிழக்கு நாடுகளில் வருமான ஒழுங்கு ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு.

பாஸ்போட், பொன்ட் கூடிய கெதியில் குறைந்த செலவில் செய்து தரப்படும்:

**GROUP ATLANTIC**

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோயில் முன்பாக)

(A 779)

# நெஸ்பிறே பருகி வெற்றியீட்டுங்கள்!

## ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு... புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிறே அருந்துவோரே!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிறே, உடன் நெஸ்பிறே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.



**இலவச அன்பளிப்புகள்**

விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிறே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனைக்கள்.

**நெஸ்பிறே புலமைப்பரிசில்கள்**

ஒவ்வொரு நெஸ்பிறே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுபக்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

**விதிகள்.**

(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித் தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஓகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டும்.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஓகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸ்லே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிறே விற்பனை நிலையங்கள், தொம்ஸன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்:
பெயர்: ____________________
முகவரி: ____________________
____________________
____________________
நெஸ்பிறே-வளரும் _____ _____
___




**நெஸ்பிறே-வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.**

JWT NJL 1956 Licence No S 522

A 733


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**அம்பலவாணர் சின்னத்தம்பி**
(கோவளம், காரைநகர்)

தோற்றம்: 09-03-1898
மறைவு: 24-06-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மைக் காப்பாற்ற அயராது உழைத்து, எம்மையெல்லாம் உயர வைத்த உத்தமரே! எங்களை ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் தங்கள் நினைவும் செயலும் என்றும் எம் உள்ளத்தை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.
C 3446

## 31-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**திரு. வேலுப்பிள்ளை சின்னராசா**
அவர்கள்
(தேசிய சிறுகைத்தொழில் கூட்டுத்தாபன இளைப் பாறிய ஊழியர்)

தோற்றம்: 15-03-1920
மறைவு: 13-06-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து அன்புடனும், பாசமுடனும், வளர்த்து அயராது உழைச்சு எங்களை வாழ வைத்த அன்பின் தெய்வமே.

ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புள்ள மனைவி,
மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

காளிகோவிலடி
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி, C 3455

## உடனடி பிரயாண ஒழுங்குகள்
## விசேஷ சேவை
### சவுதி அரேபியா
**கிளீனேர்ஸ்:-**

வைத்தியசாலே, விமான நிலேயம், மத்திய தொலேபேசித் திணேக்களம்.

20 நாட்களுக்குள் பிரயாணம் செய்யக்கூடிய ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேர்சல் ஏஜென்சீஸ்**
**இல. 125 (455), ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் முன்பாக - ஆயுர்வேதக் கல்லூரி அருகாமையில்)

(A 776)



## பிரயாண ஒழுங்குகள்
### டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜூலே 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா

**ஆகிய நாடுகளுக்கு வேலே வாய்ப்பு.**
அத்துடன்
பாஸ்போட், BOND. ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
**125 (455), ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 774


பயணங்கள்...

(9 ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் தெரிவித்தார்.

'பயணங்கள் தொடர்கின்றன' ரி. வி. சினிமா திரைப்படத்தை கவிஞர் ஜீவா நாவுக்கரசன் தயாரித்து வெளியிட்டுள்ளதையிட்டு இப் பாராட்டு கூட்டம் நடைபெற்றது யாழ் நகரில்நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்படத்தில் நடித்த நடிகர்கள், நடிகையர்கள் உடபடச் சம்பந்தப்பட சகலரும் கலந்து கொண்டனர். திரு ஜீவா நாவுக்கரசன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் இப்படத்தை தயாரித்து வெளியிடுவதற்கு ஒத்துழைபபு வழங்கிய சகலரையும் பாராட்டினா.


## ஐந்தாம் ஆண்டு நினேவு அஞ்சலி



**ஸ்ரீ தேவன்**
**இரவீந்திரன்**

மண்ணில்: 08-09-1962
மலரடியில்: 13-07-1981

நினேவுகள் வாழ்க
எண்ணம் நிறைந்திடும்
எங்கள் ரவீந்திரா
மண்ணே நீத்தரன்
மலரடி அடைந்து
ஐந்து ஆண்டாயினும்
அன்பால் உருகிச்
சிந்தை குழைகிறோம்
வாழிய நினேவுகள்

அப்பா, அம்மா, தம்பி,
உறவினர். நண்பர்கள்.

36/1, செட்டித்தெரு.
நல்லூர். C 3324



# வெற்றிடம்

## சிங்கப்பூரில் வீட்டு உதவியாளர்
### வேலேக்குத் தேவை

**ஆங்கிலம், ஆங்கிலமும் தமிழும், அல்லது தமிழ் பேசக்கூடிய 40 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள்**

சிங்கப்பூருக்குச் சென்று 2 ஆண்டுகளில் உணவு, தங்குமிடம், உடுதுணிகள், வைத்திய வசதி ஆகிய இலவச சலுகைகளுடன் 2400 அமெரிக்க டாலர்களேச் சம்பாதிக்கவும், மேலும் இரண்டு தடவை இரண்டாண்டு காலத்துக்கு, மாசும் 150 டாலர் வீதம் அதிகரித்த சம்பளத்துடன் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும் ஒரு பொன்னுன சந்தர்ப்பம்!

சிங்கப்பூர் செல்ல உங்கள் பாஸ்போர்ட்டில் வழி இல்லாமல் இருந்தால் எங்கள் சிங்கப்பூர் ஏஜெண்ட் உங்கள் தெரிவை ஊர்ஜிதம் செய்தபின் சிங்கப்பூருக்குச் செல்ல அனுமதிக்கும்படி வெளிநாட்டு வேலேவாய்ப்புப்பிரிவு சிபார்சு செய்யும்.

**தேவைகள் :** போஸ்கார்ட் அளவிலான 2 கலர் போட்டோக்கள், பாஸ்போர்ட்டுக்குரிய10 கறுப்பு/வெள்ளே போட்டோக்கள், உங்கள் பாஸ்போர்ட்டில் விபரங்கள் குறிக்கப்பட்ட சகல பக்கங்களேயும் கொண்ட A-4 அளவிலான போட்டோஸ்டெட் பிரதிகள்

**புறப்பாடு:** நேர்முகப் பரீட்சை முடிந்து 3-4 வாரங்களில் வேலேக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் புறப்படுவதற்கு ஏதுவாக இருக்கும்!

**பூர்வாங்க நேர்முகப் பரீட்சைகள் :** தினசரி எல்லா வாராந்த நாட்களிலும் காலே 9 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை, தயவு செய்து 547162 இலக்கத்துக்கு டெலிபோன் செய்து முகாமையாளர் சிங்கப்பூர் எனக் கேளுங்கள்.

**இறுதி நேர்முகப் பரீட்சைகள் :** 1986 ஜூலே 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலே 8 மணி.

## றேயல் ஏஜென்ஸி (பிரைவேட்) லிமிட்டெட்,
**158, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.**

அங்கீகார இலக்கம் : 470/03/85. 470/11/86
லேசென்ஸ் இலக்கம்:- 470.

[A 783]



## Computer Programming
and
## Data Processing Course

Basic Language 6 Months
Weekend Classes by qualified and experienced Panel of lecturers
Commencement — 27th July 1986,
Fees: 1500/-. தவணேமுறையிலும் செலுத்தலாம்.
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals
Ideal for those who seek employment abroad.
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

ICMA, AAT, IDPM, IAB, Radio and T. V. Engineering, TOEFL வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

# CANTABIA INSTITUTE
[Pioneers in Computer Education]
21, MAIN STREET, JAFFNA.
PHONE: 24201.

[A-758]



## சற்றுப் பொறுங்கள்

எசன்ஸ் வகைகள் உடலுக்கு தீங்கு விளேவிக்கின்றது!

ஆம்! இது வைத்தியர்களின் அத்தாட்சி!

ஆகவே சுத்தமான, சுகாதாரமான, பழரச பானங்களேப் பருகி உங்கள் உடல் நலத்தை இவ் விளவேனிற் காலத்தில் பாதுகாத்துக்கொள்ளுங்கள், அவ்வரிசையில் அமைவதுதான் தோலகட்டி தயாரிப்புகள். தோலகட்டி நெல்லிரசம், சுத்தமான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது கடந்த 65 வருட காலமாக மக்கள் மனதில் நிலேத்த பெயர் - மறநது விடாதீர்கள்! தோலகட்டி நெல்லிரசம் தாராளமாக கிடைக்கின்றது.

**விலே ரூபா 24/50**

ஏகப் பிரதிநிதிகள்:

| | |
|---|---|
| **செபமாலே தாசர்சபை,** தோலகட்டி, வயாவிளான், | **ஜோ. எகட்டன்,** செனத் மார்க்கட்டிங், யாழ்நகர். |

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
**வரணி மிசன் விற்பனே நிலேயம்,**
**145, நவீன சந்தை, யாழ்நகர்.**

[A 780]



SOMETHING NEW IN JAFFNA,
Yor are cordially invited to visit:

# HOTEL GNANAM'S

Under new Management
Relax at Beer Garden
Also,

## Chinese Meals, Cool Drinks, Short eats, Lunch.

| ORDERS UNDERTAKEN FOR |

- Wedding Reception
- Birthday Parties
- Cocktail Parties
- Conference
- Seminar

Etc. Etc. Etc. Etc. Etc.

## Today's Special Buffet Lunch – Rs. 47/50

உங்கள் உடலுக்கும் உளத்திற்கும்
புதிய தெம்பை அளிக்க
காலே 9-30 தொடக்கம் இரவு 11-30 மணிவரை
சேவை செய்ய காத்திருக்கிறது

## ஹோட்டல் ஞானம்ஸ்,
299, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
தொலேபேசி: 22082, 23067.
WHERE OUR STANDARDS ARE HIGH.

[A 792]

# மாகாண சபைகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் மீதும், அவற்றோடு தொடர்புடைய காணிப்பங்கீட்டாலும் மத்திய அரசாங்கம் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருக்கும். மகாவலித் திட்டமும் 200 ஏக்கருக்கு மேலான நிலத்தைப் பாசனப் படுத்தும் குளங்களும், அவ்வாறே அமையும். எனவே சிறு கிராமியக் குளங்களே மாகாணசபையின் கட்டுப்பாட்டிற்குள் வரும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் எஞ்சியுள்ள 21,390 காணித்துண்டுகளை சிங்களவருக்கு மட்டுமே வழங்குவதற்கு அரசியலமைப்பில் கொண்டுவரப்படும் மாற்றம் உறுதிசெய்யும்.

## அரசியற் சுயநிர்ணயம்

மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் குறைந்தனவாக உள்ளன அத்துடன் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மத்திய அரசாங்கத்திடமே முக்கிய அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கையளித்துள்ளது. மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் யாவும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும். பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படை தேவைகளான தெருக்கள், நெடுஞ்சாலைகள், சந்தைகள், பொது நிறுவனங்கள், போக்குவரத்து நில நீர்வளங்கள், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், உலோகப் பொருட்கள், கனிப் பொருட்கள், சுரங்கங்கள், கரையோர கப்பல் போக்குவரத்து, மீன் பிடித் துறைமுகங்கள், கட்டிடவியல் போன்றவை மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழேயே அமைகின்றன. சமுதாய முன்னேற்றத்துக்கு அடிப்படையான வங்கிகள், காப்புறுதி ஸ்தாபனங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், சமூக நல நிறுவனங்கள் முதலியவையும் அவ்வாறே அமையும். ஆராய்ச்சி, பயிரினங்களின் இறக்குமதி அரசாங்க பண்ணைகளின் நிர்வாகம், பண்ணைக் கல்லூரிகள் ஆகியவற்றின் மீதான மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் விவசாயதுறையில் மாகாணங்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும். விதைகளின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப் படுத்தியமையால் வடபகுதியில் 1978ம் ஆண்டின் பின் உருளைக்கிழங்கு செய்கை சீரழிந்தது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. மாணவர்களின் கைத்தொழில் உற்பத்தியை பொறுத்த வரையில் கைத்தொழில்களைப் பதிவு செய்யும் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் வைத்துக்கொள்கிறது. 1970ன் பின் வடபகுதியிலே கைத்தொழில் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தன் அதிகாரத்தை பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

மேல்வரும் அம்சங்கள் மாகாண சுயாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் பிரதான விடயங்கள் ஆகும்.

[அ] ஒருமாகாண சபையின் அலுவல்கள் சட்ட பூர்வமாக நடைபெறவில்லையென்று தான் கருதுமிடத்து அதனை ஜனாதிபதி கலைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்.

(ஆ) மாகாணங்களின் எல்லைகளை மாற்றுவதற்கு பாராளுமன்றம் அதிகாரம் பெற்றிருக்கும். (உதாரணம் கிழக்கு மாகாணத்தை கரையோர பகுதிகளை மட்டும் உள்ளடக்கிய ஒருசிறிய பிரதேசமாக அமைக்கலாம்)

(இ) திருகோணமலை துறைமுகத்தையும் அதன் சுற்றாடலையும் மாகாண நிர்வாகத்தில் இருந்து வேறுபடுத்தல் சுற்றாடல் என்பது திருகோணமலை நகரத்தின் ஒருபகுதியையோ முழுவதையோ உள்ளடக்கியதாக அமையக்கூடும்.

## சம உரிமைகள்

ஒரு ஒற்றையாட்சி அரசானது எல்லாப் பிரசைகளுக்கும் சம உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் தொழில் வாய்ப்பு, உயர்கல்வி, தமிழ் மொழி உபயோகம் என்பவற்றில் பாரபட்சத்திற்கெதிரான நிவாரணங்கள் எதுவும் புதிய யோசனைகளில் இடம் பெறவில்லை. திறமையினடிப்படையில் பொது நிர்வாக சேவை, பல்கலைக் கழகங்கள் போன்றவற்றுக்கான தெரிவுகள் நடைபெறுமென்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இவற்றிலே காணப்படவில்லை அத்துடன் தமிழ் மொழியினை ஒரு உத்தியோக மொழியாக ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் காணப்படவில்லை.

சட்டவாக்கம் கொள்கை வகுப்பு ஆகியவற்றில் மாகாணங்களுக்கு மிகக் குறைவான அதிகாரங்களை அளிக்கும் நோக்குடனே இப்புதிய யோசனைகள் உருவாக்கப்பட்டுள்ளனவென்று இதுவரை கவனித்தவற்றால் நன்கு புலனாகின்றது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பாவலக்கும் அடிப்படையில் அமைந்த பழைய யோசனைகளின் விரிவாக்கமாகவே இவை அமைகின்றன. மாகாணங்களுக்கு மாகாண அதிபர்களை நியமிக்கும் யோசனையானது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்தால் பிரித்தானியர் கால மாகாண நிர்வாக முறையை ஒத்த ஒன்றாகும். நாட்டு மக்கள் இவற்றை ஏற்றாலென்ன, நிராகரித்தாலென்ன நாம் அவற்றைத் தகுந்தமாற்றங்களுடன் அமுலாக்கப்போவதாக ஜனாதிபதி பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவோ இடைநிறுத்தவோ உத்தேசிக்கப்படாததனாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயுதப்படைகளை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாததனாலும் தமிழ்குடிமக்கள் மீதான போரினை தற்காலிகமாகவேனும் நிறுத்துவதற்கு எதுவித திட்டமுமில்லாமையினாலும் இந்த யோசனைகளை தேவையேற்படின் இராணுவ பலத்தின் மூலமாக நிறைவேற்றுவாரா? நன்றி:

தமிழ் பேசும் மக்கள் குரல்

## இவ்வாரம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம். வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு நண்பர்களாலும் நன்மையுண்டு

### விருச்சிகம்

சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக் கூடும். உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். உஷாராக இருக்க வேண்டும். வயது முதிர்ந்த பெண் மூலம் அவப்பெயருக்கும் இடம் உண்டு, ஆணவப் போக்கினால் அடி சறுக்க நேரிடும்.

### தனுசு

வாகனச் சொந்தக்காரர்களுக்குச் சிறப்பான வாரம் ஆசிரியர்கள்போற்றப்படுவார்கள் மாணவர் கல்வியில் முன்னேற்றமுண்டு. பொதுத் துறைகளில் நாட்டம் ஏற்படும் ஆராய்ச்சியாளர்களுக்குப் புதிய துப்புகள் கிடைக்கலாம்.

### மகரம்

மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கக் கூடும் புதிய பாதை திறக்கும் இதயத்தில் இன்பத்தின் ரேகை படரும். புத்திர சுகமுண்டு இன்பம் பொங்கும் இல்லத்தில் அமைதியும் நிலவும்.

### கும்பம்

தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்திய செலவுகளுக்கும் இடமுண்டு. உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர். சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

### மீனம்

பந்துக்களின் ஆதரவு பெருகும். களஸ்திர வழியால் சுகமுண்டு. தொழில் விடயத்தில் திருப்தி குன்றும். சுற்றாடலில் வேண்டியதைச் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும். சிலருக்குத் திடீர் வரவும் உண்டு.

திருமலை

க.வே.ரவீந்திரன்

## கொழும்பு சென்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்துவிட்டார் லொறிச் சாரதியான கே.ஆறுமுகம் (50வயது) காயங்களுடன் குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கிளினர் பத்மநாதன் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[ஐ]

## மதுரை சங்கநாபுர

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள கத்தோலிக்க மக்களின் வணக்கத்துக்குரிய தலமாகும். இவ்விரு கிராம மக்களிடையே வழக்கத்திலிருந்த வள்ளி நாய்ச்சியார், வள்ளியம்மை அழகியதேவி, காளிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, நாகபிள்ளை, காமாட்சி அம்பாள், இலட்சுமி அம்பாள், சூர்பதம் அம்பாள் போன்ற பெண்பால் பெயர்களிலும், செல்வ நயினர், குருகுல தேவர், குருதேவர், குருகுலம், த்தவர், மாணிக்கனர், கோயிலார், பட்டங்கட்டியார், தோணியப்பர், மன்றுடியார் போன்ற ஆண்பால் பெயர்களிலும் இக் கிராமங்களோடொத்த வரலாற்றுத் தாக்கம் இருப்பதனை உணரலாம்.

பெரிய நாட்டுத் தேவன் துறையில் வாழும் கத்தோலிக்கப் பெரியார்கள் மத்தியிலும் மிக்கல்பிள்ளை, சேதுருப்பிள்ளை, சிமியோன்பிள்ளை போன்ற பெயர்கள் சிறப்புற்றிருந்ததனைக் காணலாம். போர்க்குணம் நிரம்பிய இவ்விரு கிராம மக்களுடன் பழகும்போது இவர்களது வரலாற்றுப் பின்னணி பளிச்சிடுகின்றது. இம் மக்களின் போர் வழிமுறைகள், திறமைகள் அந்நியர் காலத்தில் பழுங்கடிக்கப்பட்டுவிட்டன, இவர்களது கடலோடும் திறமும் குன்றிவிட்டது. அந்நியரை எதிர்த்து வாழ்ந்ததால் கல்வியில் கூட இவர்கள் அக்கறை செலுத்தவில்லை - இக் காரணங்களால் இவர்களின் வரலாற்றுப் பின்னணி மங்கத் தொடங்கியது.

இன்றைய நிலையில் பேராசிரியர் அப்புக்காத்துக்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டன்ட் போன்ற பெரும் பதவியில் இக் கிராம மக்கள் இருந்தாலும் வயதில் இளையவர்களாகவே இருக்கின்றார்கள். காரணம் இவர்கள் கல்வியில் நாட்டம் காட்டியது மிக அண்மைக் காலமேயாகும்

Prof David Kenneth - Jewi

டேவிட் கெனத் என்னும் அமெரிக் யூதப் பேராசிரியர் எழுபதுகளில இங்கு வந்து சில ஆராய்ச்சிகள் நடத்தினர் அவரது முடிவுகள் இயன்ற வரை கிடைக்கவில்லை அவரது முடிவு எதுவோ தெரியவில்லை ஆனாலும் இவ்விரு கிராமங்களிலும் ஓர் சத்திரிய வரலாற்றுப் பின்னணி மிக நீளமாக பிணைந்து ஓடுவதனையும் இக் கிராமங்கள் பற்றி மேலும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள யாழ்ப்பாணத்து மக்கள் வீர மரபினர்களின் வழித் தோன்றல்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாகவும் அமையும.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திரு. சின்னையா சரவணமுத்து

[ஓய்வு பெற்ற பிரதம தபாலதிபர்]

தோற்றம்: 13-04-1915

மறைவு: 13-06-1986

திதி: 13-07-1986

அன்பை முதலாய் எமக்காக்கி அரிய மொழியாம் அமுதூட்டி இன்பம் இசைய வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே, தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்த இந்த 31-ம் நாளில் தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். 16-06-1986 அன்று நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அபிவிருத்திச் சபையினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஸ்ரீமதி வாசா'
சுதுமலை மத்தி.
மானிப்பாய். C 3460

## திகதி மாற்ற அறிவித்தல்

வண்ணார்பண்ணை யாழ் வீதி இலக்கம் 34, ஞான வைரவர் கோயில் கட்டிட நிதி சம்பந்தமான இசை நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு 05-08-86-ல் மீண்டும் நடைபெறுமென்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாக
உறுப்பினர்கள்.

C 3468

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

வருமானவரிக் கணக்கெழுதுவதற்கு அனுபம் வாய்ந்த கணக்காளர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். M/S சுல...ம்ஸ் 95. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C 3464)

### தவறவிட்டது

இறப்பு வீட்டுப் பதிவைக் கொண்ட வீடியோ கொப்பி ஒன்று அராலி மினிவானில் தவறிவிட்டது. தயவுடன் எடுத்தவர்கள் 'கௌரி போறஸ்', ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். [C 3463]

### லிடோ

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ் சரிதா நடித்த

**மௌனகீதங்கள்**

(கலர் - புதிய பிரதி)

### வெலிங்டன

10-30, 2-30, 4-30, 6-30 P-M

முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.

**VENOM**

Action - Thrill

## கட்டிட கலைஞர்களுக்கும் புதிதாக வீடுகட்டுபவர்களுக்கும் ஓர் நற்செய்தி

வடமாகாணத்திலேயே புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள HELLOW BLOCKS உற்பத்தி செய்யும் மித்ரா சீமெந்து உற்பத்தியாளர்களின் ஏகப்பிரதிநிதிகளாக யாழ்ப்பாணத்திலுள்ள

MAN POWER MAKETING SERVICE
533, Stanly Rd,
Jaffna

என்னும் முகவர்களை நியமனம் செய்துள்ளோம் என்பதை மிகமகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நீங்கள் வீடுகட்டும்போது 25% இலாபம் பெறவும் கோடைகாலங்களில் வெப்பநிலையிலிருந்து உங்களைக் காப்பாற்றவும் இன்னும்பல விசேட நன்மைகளைப் பெறவும் கட்டிட பொறியியல் நிபுணரின் ஆலோசனைகளைப் பெற்று குறைந்த செலவில் நீடிய கால பாவனையுள்ள கட்டிடங்களை கட்டிமுடிக்க தொடர்புகொள்ளவும்.

MARKETING MANAGER,
Manpower Marketing Services,
533, Stanly Rd,
[இராசாவின்தோட்டம் சந்தி]
Jaffna.

MITHIRA CONCRETE WORKS,
Puloly-East,
Point-Pedro. (C3458)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 13-7-86

யாழ். குடாநாட்டில்

# உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம்

## உணவுக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் அச்சம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

''உள்நாட்டுப் போர்காலத்தில் பிரஜைகள் கஷ்டப்படுவது தவிர்க்கமுடியாதது. வவனியாவுக்கிப்பால் யாழ் குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு சிலசமயம ஏற்படக்கூடும்''

யாழ். உணவுக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு. எஸ். பற்குணம் தீவுப்பகுதி மக்கள் இன்று எதிர்நோக்கும் கஷ்டங்கள்பற்றி ஆராய்வதற்கென நடத்தப்பட்ட சருத்தரங்கில் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் திரு. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. பற்குணம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: உணவுப் பொருட்களின் விலைகளைக்கூட்டி விற்பதனை நிறுத்துவதன்மூலமும் உணவுக் களஞ்சியங்களைப் பாதுகாப்பதன் மூலமும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டை ஓரளவு குறைக்கமுடியும்.

கூட்டுறவுச் சங்கங்களில் அரிசிமுதலியவற்றை சாதாரண காலங்களில் மக்கள் வாங்காமல் இருந்துவிட்டு தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களைத் தேடி வருவர். அங்கு நீண்டகாலமாக இருப்பில் இருந்த அரிசியை வாங்கிவிட்டு கூட்டுறவுச்சங்கத்தை குறைகூறுகிறார்கள். மூன்று மாதங்களுக்கு மேலாக அரிசி, சீனி, மாவு என்பனவற்றை வைத்திருப்பது கடினமான காரியமாகும். இன்று அரசாங்கம் உணவுப் பொருட்களை இருப்பில் வைத்திருக்கக்கூடியதாக அனுப்பி வைப்பதில்லை.

தீவுப்பகுதி மக்களுக்கு விரைவில் உணவுக் களஞ்சியம் அமைக்கப்படும் ஒரு மாதம் தேவைப்படும் 75000 தொன் அரிசி வரத்தக்க போக்குவரத்து வசதியேற்படாவிட்டால் உணவுத் தட்டுப்பாடு தவிர்க்க முடியாததே.

மக்கள் உணவுக்களஞ்சியங்களைப் பாதுகாக்கவேண்டும். விலைகளைக் கூட்டிவிற்காமல் வர்த்தகர்கள் இருத்தல் வேண்டும். இதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம்''

வணபிதா கிருபானந்தா அடிகள் உட்பட ஒவ்வோர் தீ ப்பகுதிகளையும் சேர்ந்தபிரதிநிதிகள் உரையாற்றினர்கள். [ஐ]

## பாதை அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி.

தீவுப்பகுதியின் போக்குவரத்து நெருக்கடி நிலை பற்றி யாழ் அரசாங்க அதிபரை தீவுப்பகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்கள்.

இதன் பிரகாரம் அராலி கடலின் துறையின் இருபுறமும் 100 மீட்டர் வீதம் பாதை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஐ]

## திருமலையில் மீண்டும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு.

திருமலை நிர்வாக மாவட்டத்தில் மீண்டும் நேற்று மாலை 6 மணிமுதல் இன்று காலை6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனபாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

மீண்டும் இன்று மாலை 6 மணிக்கு அமுலில் வரும் ஊரடங்குச் சட்டம் நாளை காலை 6மணிவரை நடைமுறையிலிருக்கும். [சிவ]

## 14 ம் திகதியல்ல 15 ம் திகதியே நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

மானிப்பாய் கல்வி வட்டார ஆங்கிலதினப் போட்டிகள் திட்டமிட்டவாறு எதிர்வரும் 14 ம் திகதியன்று நடைபெறமாட்டாது என்று இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். இப்போட்டிகள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## 'ஹெலி' நடமாட்டத்தினால் அச்சம்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

கைதடி - கோப்பாய் பாலத்தருகே தினமும் 'ஹெலி கொப்டர்' தாழப் பறந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதால் இப்பாலத்திற்கு அண்மையில் உள்ள கைதடி கலைவாணி வித்தியாசாலைக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப் பாடசாலையில் மாணவரின் வரவு தினமும் குறைந்து வருவதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார் ஏற்கனவே இங்கு நடைபெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலின் போது இப்பாடசாலையின் போது இப்பாடசாலையின் சில கூரை ஓடுகளும் உடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது [து]

## அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு விவேகமான பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### போராளிகளுக்கான அஞ்சலிக்கூட்டத்தில் உரை

அச்சுவேலி, சனி.

''தமிழீழம் ஒன்றே எமது இறுதி இலட்சியம் ஆயுதப் போராட்டமே அதனை அடைவதற்கான ஒரே மார்க்கம். இருந்த போதிலும் சர்வதேச ஆதரவை எமது நிலைப்பாட்டுக்கு ஒத்தாசையாகப் பெறும் வரை அரசியல் தீர்வுபற்றியும் ஆராய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளவர்களாக நாம் இருக்கிறோம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் தென் ஆபிரிக்காவின் சுதந்திர இயக்கமான 'சுவாப்பே'யையும் பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. எமது விடுதலை இயக்கத்தை இதுவரை எவரும் அங்கீகரிக்கவில்லை அந்த அங்கீகாரத்தை பெறவிடாது தடுப்பதற்கு ஜே. ஆரின் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாமும் விவேகமானபதில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்''.

இவ்வாறு நேற்று முன் தினம் இரவு அச்சுவேலியில் அண்மையில் கடலில் வீரமரணமடைந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் போராளிகள் ஏழு பேருக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக நடாத்தப்பட்ட கூட்டத்தில் பேசிய ஈ. ம. பு. வி. முன்னணியைச் சேர்ந்த டேவிட்சன் குறிப்பிட்டார்.

அவர் பேலும் பேசுகையில் ''இந்தஅரசோ அல்லது வேறு எந்த சிங்கள அரசோ தமிழமக்களின் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காணப் போவதில்லை. உலக அபிப்பிராயத்தை தன்பால் கவர ஜே. ஆர். எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாமும் பதில் நடவடிக்கை எடுகக வேண்டியவர்களாக உள்ளோம். எமது பக்கத்திலுள்ள நியாயத்தை மற்றையநாடுகளும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் வெறுமனே குழப்புவர்கள் இல்லை என்று வெளிப்படுத்துவதற்காகவும் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அப்படியான நடவடிக்கைகளே நாங்கள் திம்புப் பேச்சுவார்த்தைக்குச் சென்றமை மாகாணசபை ஆலோசனைகளைப் பரிசீலித்தமை போன்றவையாகும்.

இந்த எமது நிலைப்பாட்டை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மறைந்த எமது தோழர்கள் மக்கள் விடுதலைப்படையின் முன்னணிப் போராளிகளாவர் அவர்கள் பல நேரடி மோதல்களில் பங்குபற்றி வெற்றிகண்டவர்கள். ஆயுதம் தரித்த போராளிகளாக இருந்த போதிலும் மக்களை மதித்து மக்களுடன் பழகி அவர்களுக்கு சேவை செய்தவர்கள்''.

## திருக்கோயில் பகுதியில் தேடுதல் வேட்டையில் நூறுபேர் கைது

மட்டக்களப்பு, சனி

பொத்துவில் தொகுதியிலுள்ள திருக்கோயில் பகுதியில் ஆயுதப்படையினர் இராக்காலங்களில் திடீர் திடீரென தேடுதல் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்று அதிகாலை திருக்கோயில் தாண்டியடிக் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் 100க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளனர்.

திருக்கோயில் முகாமிலுள்ள கொமாண்டோக்களும் கோமாரிமுகாமிலுள்ள இராணுவத்தினருமே தேடுதல் வேட்டை நடத்துகின்றனர். [மா]

## நேரடிப் பேச்சுக்கள்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னர்களையும் சந்தித்துப் பேச விருப்பதாகவும் கூறினர்.

இதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணி குழுவினர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளுடனும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதனிடையே இன்று கூட்டணி குழுவினர், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என். டிக்ஸிற்றைச் சந்தித்து ஒருமணி நேரம் பேச்சு நடத்தினர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல்க் கட்டப் பேச்சுவார்த்தைகளை கூட்டணிக் குழுவினர் ஜனாதிபதியுடன் நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ய-பி]

## நிலைமைசீராகும்வரை..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்ந்து நடப்பதும், தமிழ்ப் பகுதிகளில் இன்னமும் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதுமே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

## "ஸ்ரீலங்கா அரசு பல வழிகளிலும் எம்மை அழிதது வருகிறது!"

### முற்போக்கு மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஸ்ரீலங்காபேரினவாதஅரசு பயங்கரவாதத் தடைச்சட்டம், கடல்கண்காணிப்புச் சட்டம், மீன்பிடித் தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் எமது மக்களை பட்டினியாலும், துப்பாக்கியாலும் கொன்று குவித்து வருகின்றது', என முற்போக்கு மாணவர் சங்கம் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

''கொலைகளால்புரட்சியைத் தடுத்துவிட முடியுமா?''என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் மேலும் காணப்படுவதாவது:

''அடக்குமுறைகளுக்குப் பயந்து மௌனமாக இருப்பதாலோ அல்லது வேறு நாடுகளிற்கு செல்வதாலோ அல்லது பிறசக்திகளை நம்பியிருப்பதாலோ எமது பிரச்னை திரப்போவதில்லை. இது எமது இனத்தை நிரந்தர அடிமை நிலைக்கே இட்டுச் செல்லும்.

சென்ற 10ந் திகதி தொழிலுக்குச் சென்ற 34 மீனவர்களை ஆக்கிரமிப்பாளர்கொன்று குவித்தனர், அவர்களுக்கு எமது அஞ்சலிகள்.

அடக்குமுறைச்சட்டங்களால் தொழில்செய்ய முடியாமல்பட்டினியால் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் வறிய மீனவத் தொழிலாளர்களே. பட்டினி போடுவதன்மூலமும், கொலை செய்வதன்மூலமும் அகதிகளாக நாட்டைவிடுட்டுத் துரத்துவதன்மூலமும் தமிழீழப் பொருளாதாரத்தை அழிக்க ஆக்கிரமிப்பாளர்கள் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றனர்.

''எனவே அனைத்து மக்களும் ஒரணியில் திரண்டு ஸ்ரீலங்கா கூலிப்பட்டாளங்களை விரட்டியடித்து எமது கடலிலும், நிலத்திலும் தொழில் செய்வோம்.'' (ஐ)

# மரண அறிவித்தல்

## திருமதி யோகலட்சுமி துரைசாமி

மயிலிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் K.V. துரைசாமி J P அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கோகிலகுமாரி யோகானந்தம், ரஞ்சன், ரவிசந்திரன் [Netheiland], சக்திகிருஷ்ணன் B A [Cey], திருமதி வானதி ஸ்கந்தராசா B A ஸ்ரீ கரன் H I E T [India] ஸ்ரீ வத்சன் H I E T [India], ஸ்ரீ சிவசக்தி [Union College] ஸ்ரீதேவி [Union College' ஆகியோரின் அன்புத்தாயாரும். R யோகானந்தம் L L B எஸ். ஸ்கந்தராசா Bsc [U.K] Mrs. நிர்மலா ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுந்தரலிங்கம் [Rtd Teacher] Dr. K. நடேசலிங்கம் M.R C P [U K], திருமதி செல்வி மகாலிங்கம், [Saudi], இந்திரலிங்கம் ]Saudi] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(13-7-86) ஞாயிற்றுக்கிழமை பி. ப, 3-00 மணியளவில் மயிலிட்டியில் நடைபெறும் தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[C-3461] K. V. துரைசாமி

## இராமலிங்கம் தங்கம்மா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்த்தகர் கந்தையா இராமலிங்கத்தின் மனைவி தங்கம்மா காலமானார்- இவர் இராஜகுலசிங்கம், ஈஸ்வரி, காலஞ்சென்ற மகள் கணேசலிங்கம் இராசேஸ்வரி, ஆகியோரின் தாயாரும் ஓய்வுபெற்ற நீர்பாசன இலாகா ஓவசியர் இராஜகுலசிங்கம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலம் சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும். பத்மநாதன், இராஜேஸ்வரன், கணேஸ்வரன் [மோகன்], இராஜேஸ்வரி, இராசமலர், சிவராஜமனோகரன், நிஷந்தன, தேவபாலன், சிவநேசன் கீதா, பரமேஸ் ஆகியோரின் பேத்தியுமாவார், அன்னாரது ஈமக்கிரியைகள் 13-7-86 [இன்று] பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்-

வைரவர் கோவிலடி,
கொக்குவில் கிழக்கு. மகள், மருமகன்.
[C-3467]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.